Registered as a NewsPaper


விலைரூபா–07

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி –27 | 10–03–2004 | புதன்கிழமை | ஓசை –021



உங்கள் அனைத்து தேவைகளுக்கும்

R.V. பந்தல் சேவை

தருமபுரம்.

விநாயகர் வீதி, மயிலிட்டி.

# தமிழ் மக்கள் அபிலாசைகளை வெளிப்படுத்த தேர்தலில் அரசாங்கம் வாய்ப்பளிக்க வேண்டும்

## கிளி.வந்த பிரிட்டிஷ் தூதுவரிடம் தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

**தமிழ் மக்கள் இம்முறை தேர்தலில் தமது அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்பதே அனைவரது விருப்பமும். அந்த விருப்பத்திற்கு சிறிலங்கா அரசாங்கம் சரியாக மதிப்பளிக்க வேண்டும் என்பதை பிரித்தானிய தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளோம்.இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

சிறிலங்காவுக்கான பிரித்தானியத் தூதுவர் அடங்கிய குழுவினரை அரசியல்துறை நடுவப் பணியகத்தில் சந்தித்து பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இச்சந்திப்பில் முக்கியமாக ஆராயப்பட்ட விடயங்கள் எவை எனக் கூற முடியுமா?

பிரித்தானியத் தூதுவருடனான இச்சந்திப்பில் தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் தொடர்பாகவும், எதிர்வரும் பொதுத் தேர்தல் நடைமுறைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இந்தச் சந்திப்பில் முக்கியமாக நாம் தமிழர் தாயகப் பிரதேசத்தில் நாம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் அவசர மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான தேவைகள் சம்பந்தமாக நாம் கூடுதலாக

(8ஆம் பக்கம் பார்க்க)



நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது...

## கிளி.தொண்டர் நிறுவனங்களிற்கு பிரி.தூதுவர் நேற்று விஜயம்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த பிரித்தானியத் தூதுவர் ஸ்ரீவன்இவான்ஸ் அவர்கள் கிளிநொச்சியில் இயங்கி வரும் தொண்டர் நிறுவனங்களுக்கு சென்று அவற்றின் வேலைத்திட்டங்களை நேரடியாக பார்வையிட்டுள்ளார்.

நேற்று மாலை மூன்று மணிக்கு



கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துக்கு சென்று புதிதாக அமைக்கப்பட்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பயன்மிக்க சந்திப்பொன்றை புலிகளுடன் மேற்கொண்டேன்

### பிரித்தானியத் தூதுவர் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மிகவும் பயன் மிக்க சினேகித பூர்வமான சந்திப்பொன்றை நேற்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்செல்வன் அவர்களுடன் மேற்கொண்டதாக சிறிலங்காவுக்கான பிரித்தானிய தூதுவர் ஸ்ரீவன் இவான்ஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறை நடுவப்பணியகத்தில் இடம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் வாக்களிக்க முகமாலையில் இராணுவச் சோதனைகள் விலக்கப்படும்

### யாழ். இராணுவக் கட்டளைத் தளபதி தெரிவிப்பு

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்க ஏதுவாக முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் படையினரின் சோதனை நடவடிக்கைகள் விலக்கிக் கொள்ளப்படுமென யாழ்.இல் நிலைகொண்டுள்ள சிறிலங்காப் படையினரின் தலைமை அறிவித்துள்ளது. அத்துடன் முகமாலை இராணுவச் சோதனைச்சாவடிப் பகுதியிலேயே அவர்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுமிடத்து, இராணுவச் சோதனைச் சாவடியை 500 மீற்றர் பின் நகர்த்தவும் படைத் தரப்பு சம்மதித்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற சந்திப்பொன்றிலேயே யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால இம்முடிவை அறிவித்துள்ளார். பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகி சுமார் இரு மணி நேரத்திற்கு மேலாக நீடித்த இச்சந்திப்பில் அவருடன் பலாலி படைத் தலைமையகத்தைச் சேர்ந்த கேணல் ரணதுன மற்றும் கேணல் சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## பெண்போராளிகள் மீது கடற்படையினர் அடாவடி பொதுமக்களின் எதிர்ப்பால் பின்வாங்கினர்

(யாழ்ப்பாணம்)

பெண்போராளிகளை இடுப்புப் பட்டியைக் கழற்றுமாறு கூறி கடற்படையினர் பெரும்அடாவடித் தனங்களில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.தீவகம் குறிகாட்டுவன் பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற இச்சம்பவம்பற்றித் தெரியவருவதாவது.

வேலணையில் இருந்து நெடுந்தீவு நோக்கி தமது அரசியல் பணிகளுக்காக சென்று கொண்டிருந்த 3 பெண்போராளிகளை குறிகாட்டுவானில் வழிமறித்த கடற்படையினர் அவர்களின் இடுப்புப் பட்டியைக் கழற்றுமாறும் அவ்வாறு கழற்றினால் மட்டுமே மேற்கொண்டு பயணிக்க அனுமதிக்க முடியும் எனபடையினர் எச்சரித்துள்ளனர்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த பெண்போராளிகள் இராணுவ உபகரணங்களுடன் சம்பந்தப்பட்ட இடுப்புப்பட்டி அணிவதே யுத்தநிறுத்த காலத்தில் தடைசெய்யப்பட்டது எனவும் தற்பொழுது தாம் அணிந்திருப்பது சாதாரண துணிவகைகளால் ஆனது எனவும் அது இராணுவ உபகரணத்துடன் சம்பந்தப்பட்டது அல்ல என்பதையும் தெளிவுபடுத்தினர்.

எனினும்இதனை ஏற்காத படையினர் போராளிகளுடன் வீண் வாக்குவாதங்களில் ஈடுபட்டதால் பெரும் முறுகல் நிலை ஏற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊடகத்தின் செய்திக்கு கேணல் பதுமன் மறுப்பு

தான் வன்னியில் நலமாக இருப்பதாக திருகோணமலை மாவட்டத் தளபதி பதுமன் செய்தி ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். அரச ஊடகத்தினூடாக தன்னைக் குறித்து வெளியிடப்பட்ட வதந்தியை நம்பவேண்டாம் என தமிழ் மக்களிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார். அதேவேளை, சில ஊடகங்களும் சமூக விரோதச் சக்திகளும் வெளியிடும் இவ்வாறான கதைகளை நம்பவேண்டாம் என தமிழ் மக்களிடம் திருகோணமலை மாவட்ட அரசியல்துறையினரும் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

## விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

அனுராதபுர மாவட்டத்தில் 5840 தபால் வாக்களிப்பு விண்ணப்பப்படிவங்கள் அனுராதபுரம் உதவி தேர்தல் பரிசோதகரால் நிராரிக்கப்பட்டுள்ளது.அனுராதபுர மாவட்டத்தில் தபால் தேர்தல் அட்டைகள் விநியோகம் அனுராதபுரம் மாவட்ட செயலகத்தில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே விசேட தூதுவர் நாளை கிளி. வருகை

(அலுவலக செய்தியாளர்)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஆகியோர் நாளை கிளிநொச்சிக்கு வருகை தந்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சுநடத்தவுள்ளனர்.

இன்று காலை விமானம் மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடையும் இவர்கள் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையிலான குழுவினரைச் சந்தித்து பேசவுள்ளனர். (லோ)

## வரி விளம்பரம்

### வேந்தன் பல்கட்டும் நிலையம் கிளிநொச்சி

பல்கட்டுதல், மிதப்பு பற்களுக்கு கிளிப் போடுதல் என்பவற்றை சிறந்த முறையில் செய்து கொள்ள மத்திய கல்லூரி மைதானம் முன்பாக வேந்தன் பல் கட்டும் நிலையம், யாழ். கண்டி சாலை, ஆனந்தபுரம். (சி.9319)

### தவறிவிட்டது

கனகரத்தினம் - திருஞானம் என்பவருடைய குடும்ப அட்டை கனகபுரத்திற்கும், திருநகருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை அல்லது நிர்மாணிய தலைமைப் பணிமனையில் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். (4307)

### தவறிவிட்டது

செல்வராசா ராகுலன் ஆகிய எனது பயண அனுமதி அட்டை மற்றும் 853091286V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை என்பன ஒருகைப் பேசுடன் புளியங்குளத்திற்கும் மல்லாவிக்குமிடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையிலோ அல்லது தாரணி தேன்சுவையகம் மல்லாவிஎனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். தகவல்:- செ.ராகுலன். (சி-9326)

# சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கல் சேவை பிற்போடப்பட்டது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 13,14ஆம், திகதிகளில் நடாத்தப் பெறவிருந்த சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்களுக்கான நடமாடும் சேவை தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப் பட்டுள்ளதெனவும் மீண்டும் நடைபெறும் திகதிகள் பின்னர் அறியத்தரப்படுமென கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார். (சோ)

# நாட்டின் 50 வீதமான மக்களை கிறிஸ்தவத்திற்கு மாற்றச் சதியாம்

*வித்தியோதய பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவிப்பு*

இந்நாட்டில் வாழும் ஐம்பது சதவீதமான மக்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றும் பின்னயில் சர்வதேச கிறிஸ்தவ அமைப்புக்கள் தற்பொழுது செயல்பட்டு வருகின்றதென வித்தியோதய பல்கலைக்கழக உபவேந்தர் சுமனதிஸ்ச தேரர் கூறியுள்ளார். கோடிக்கணக்கான நிதிகள் இப்பிரச்சார வேலைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இவைகள் யாவும் கிராமிய மட்டத்தில்வறிய மக்களுக்கு பகிர்ந்தளிப்பு செய்யபட்டு வருகின்றதெனவும் கொரிய நாட்டில் 99 சதவிகிதத்தினர் பௌத்தர்களாக இருந்தனர். ஆனால் தற்பொழுது 49 சதவிகிதத்தினரே பௌத்தர்களாக உள்ளனர். இம்மாதிரியான பல மதமாற்றங்கள் எமதுநாட்டில் ஏற்படபோகின்றதென்று தேரர் மேலும் கூறியுள்ளார்.

## சாவு அறிவித்தல்

### கதிரேசு சிவயோகமலர்

பரவிப்பாஞ்சான் கிளிநொச்சியை பிறப்பிடமாகவும், அழுதகரபி வில்சன்வீதி இரணைமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.கதிரேசு சிவயோகமலர் அவர்கள் 06.03.2004 சனிக்கிழமை காலமானார். இவர் காலம்சென்றவர்களான நடேசு செல்லம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும் பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா கதிரேசு (முன்னாள் கிளிநொச்சி வனஜா கபே உரிமையாளர் காந்தி) அவர்களின் பாசமிகு மனைவியும், திருவையாறு ந.நடராசா ந.சண்முகநாதன் (கிளி) ஆகியோரின் சகோதரியும் திருமதி.வனஜா கண்ணதாசன் (ஆசிரியை திருவையாறு மகாவித்தியாலயம்) கிருஸ்ணகுமார் (பிரான்ஸ்), திருமதி கிருஸ்ணலதா கதிர்காமநாதன்(நடன ஆசிரியை லண்டன் தமிழ் நிலையம்), கஜேந்திரகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் க. கண்ணதாசன் (ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பலாலி) தி.கதிர்காமநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அட்ஷயாவின் அன்பு பேத்தியுமாவார். இவரது இறுதிக் கிரியைகள் இரணைமடு வில்சன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் 10.03.2004 புதன்கிழமை நடைபெற்று மாலை 4.00 மணிக்கு இரணைமடு இந்து மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**கணவர் பொ.கதிரேசு (காந்தி)**
**பிள்ளைகள், மருமக்கள்.**

(3542)

## அலுவலக இடமாற்றம் தொடர்பானது

*கிளி/ மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைமை அலுவலகம் இன்று 10.03.2004 புதன்கிழமை தொடக்கம் முறிப்பு வீதியில் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அண்மையிலுள்ள ஒன்றியத்தின் சொந்தக் காணியில் இயங்கவுள்ளது என்பதனை ஒன்றியத்தின் அங்கத்துவ சங்கங்கள் உட்பட சகலருக்கும் அறியத்தருகின்றோம்.*

*நன்றி.*

**கூட்டுறவுச்சேவையிலுள்ள,**
**(மா.நடராசா)**
**தலைவர்.**

(சி.9411)

# தென்மராட்சியில் கண்ணிவெடிகளால் மக்கள் மீளக்குடியமரமுடியா நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சிப்பகுதிகளில் வெடிபொருட்களை அகற்றும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட மிதிவெடிகள் செயற்பாட்டு ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி பிரதேசத்தில் இராணுவ அதிஉயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே பல இடங்களில் மக்கள் குடியேறக் கூடிய சூழ்நிலை ஏற்படவில்லை காரணம் இப்பகுதிகளில் படையினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் மற்றும் கைவிடப்பட்ட வெடிபொருட்களின் அபாயம் அதிகமாக காணப்படுகிறது.

இதனால் பல்லாயிரக்காணக்கான குடுபம்பங்கள் மீள்குடியமர முடியாது தற்காலிக வாழ்விடங்களில் வாழ்ந்து வருகின்றன இதனைக்கருத்தில் கொண்டே மேற்படி பகுதிகளில் வெடிபொருள் அகற்றும் நடவடிக்கைகள் துரிதப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

எனினும் இந்த நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்தபடையினரின் ஒத்துழைப்பு போதாதிருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (33)

# மீரிகானவில் குண்டுத் தாக்குதலில் மூவர் பலி; ஐவர் படுகாயம்

(கொழும்பு)

களுத்துறை மீகாதென பிரதேசத்தில் இடம்பெற்ற குண்டு வீச்சில் மூன்று பேர் பலியாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நடந்த இந்தச் சம்பவத்தின்போது ஒருவர் அந்த இடத்திலும், மற்றையவர்கள் மருத்துவமனையிலும் மரணமாகினார்.

இந்தக் குண்டு வீச்சானது தனிப்பட்ட குரோதம் காரணமாகவே இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

வெதுப்பகம் ஒன்றை வாடகைக்கு வழங்கியதன் அடிப்படையிலேயே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதன்போது குண்டுத் தாக்குதலை நடத்திவரும் அருகில் இருந்த இருவருமே குண்டு தவறுதலாக வீழ்ந்து வெடித்ததில் பலியானவர்களாவர். இதன்போது மேலும்ஐவர் படுகாயமடைந்துள்ளனர். இருவரின்நிலை கவலைக்கிடமாகியுள்ளது.

## கண்டெடுப்பு

(அலுவலகசெய்தியாளர்)

யாழ். கொக்குவிலைச் சேர்ந்த எஸ்.பாலசிங்கம் என்பவரது பாரவூர்தி இல 027 சிறி6003ன் 2004ஆம் ஆண்டிற்குரிய வரி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப்பத்திரம் ஆகியன கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரித்துடையவர் அலுவலக நேரத்தில் சமுகமளித்து பெற்றுக் கொள்ளலாம். (சோ)

## கருத்தரங்கு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதாரசேவைப்பணிமனையினாரல் "உடல் நிறை கூடினாலும், உடல் நிறை குறைந்தாலும் நோய்வரும்" எனும் கருத்தரங்கு நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

இன்று மாலை 7.00 மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் ஆர்வலர்கள் கலந்து பயன்பெறும் வண்ணம் கிளி.மாவட்ட பிரதி மாகாண சுகா தார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி வேண்டுகை விடுத்துள்ளார்.(சோ)

## விளையாட்டு விழா

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சால் வருடாந்தம் நடத்தப்படும் விளையாட்டுவிழா கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்றது. இதன் இறுதிநாள் பெருவிளையாட்டு விழா எதிர்வரும் 12,13ஆம் ஆகிய இரு தினங்களும் பரந்தன் இளைஞர் வட்ட மைதானத்தில் பிரதேச செயலர் சீ.சிவசொருபநாத பிள்ளை தலைமையில் காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற உள்ளது. இவ் விளையாட்டு நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிளி/ அரசஅதிபர் தி.இராசநாயகம் கலந்து கொள்ளவுள்ளார் இவ்விழாவில் கண்டாவளை பிரதேசத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்கள் பங்கு கொண்டு விளையாடவுள்ளனர். (14)

# பதவிவெற்றிடம்

மேற்படி எமது சங்கத்தின் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. விண்ணப்பிக்க விரும்பும் தகைமையுள்ள ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் "தலைவர் வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நெடுங்கேணி." எனும் முகவரிக்கு 25.03.2004ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அன்றேல் பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். சங்கத் தொழிற் பரப்பிற்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

**01.இலிகிதா :-** 165/88-14 31/99ன் படி

**சம்பளம் :-** 5000.00-70.00X10 -75.00X10 / 60000.00-840.00X10-900.00X10 = 77400/=

**கல்வித்தகைமை:-**

1. க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் தமிழ் பாஷை, கணிதம்1/கணிதம்2, வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம், ஆகிய இருபாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுட்பட மொத்தம் மூன்று பாடங்களில் திறமைச்சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. தமிழ், கணிதம்/வர்த்தகமும் கணக்கியலும் க.பொ.த. உயர்தரத்தில் சித்திபெற்றிருப்பின் க.பொ.த.சாதாரணதரத்தில் சித்திபெற்றிருப்பின் க.பொ.த.சாதாரணதரத்தில் தமிழ், கணிதம்1/கணிதம்2/வர்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகிய இவற்றில் ஒன்றில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக்கப்படும்.

**02.களஞ்சியப்பொறுப்பாளர்:-** 165/88-13 31/99ன் படி

**சம்பளம் :-** 5250.00-75.00/10-80.00/10 / 63000.00-900.00/10-960/10 =81600.00

**கல்வித்தகைமை:-**

1. க.பொ.த.சாதாரணதரப்பரீட்சையில் தமிழ் பாஷை, கணிதம்1, கணிதம்2 வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகிய இரு பாடங்களில் திறமைச்சித்தியுட்பட மூன்று பாடங்களில் திறமைச்சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. தமிழ், கணிதம்/வர்த்தகமும் கணக்கியலும் க.பொ.த.உயர்தரத்தில் சித்தி பெற்றிருப்பின் க.பொ.த.சாதாரணதரத்தில் தமிழ், கணிதம்1/கணிதம்2/வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம் ஆகிய இவற்றில் ஒன்றில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதிலிருந்து விலக்கப்படும்.

**03.வாகனச் சாரதி:-** 165/88-14 31/99ன் படி

**சம்பளம் :-** 5000.00-70.00/10-75.00/10 / 60000.00-840.00/10-900.00/10 = 77400/=

**தகைமை:-** 5ஆம் ஆண்டு கல்வித்தகைமையுடன் பஸ்/லொறி/உழவு இயந்திரம் பெட்டியுடன் செலுத்தத்தக்க சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 2வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

**வ.வ.ப.நோ.கூ.சங்கம்,**
**நெடுங்கேணி.**

(7170)

# அணுவாயுதத் திட்டத்தை முற்றாகக் கைவிட அமெரிக்கப் படைகள் விலக வேண்டும்

## வடகொரியாவின் புதிய நிலைப்பாடு

(பியாங்யாங்)

**அமெரிக்காவின் வேண்டுகோளின்படி தனது அணுவாயுதத் திட்டத்தை முழுமையாகக் கைவிட வேண்டுமானால் தென்கொரியாவில் இருந்து அமெரிக்கா தனது படைகளை வாபஸ் பெற வேண்டுமென்று வடகொரியா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.**

வடகொரியாவின் அணுவாயுதத்திட்டங்கள் தொடர்பான பீஜிங் ஆறு தரப்புப் பேச்சுவார்த்தையின் போது வடகொரியா தனது அணுவாயுதத்திட்டத்தை முழுமையாக ஆதாரங்காட்டக்கூடிய வகையில் கைவிட வேண்டும் என்று அமெரிக்கா தொடர்ந்தும் வலியுறுத்தியிருந்தது. இதற்குப்பதிலளிக்கும் வகையிலேயே வடகொரியா இதனைத் தெரிவித்துள்ளது.

வடகொரியா தனது அணுவாயுதத் திட்டங்களை முழுமையாக ஆதாரங்காட்டக்கூடிய வகையில் கைவிடவேண்டும் என்பதை உறுதியாகக் கோருமானால் தென்கொரியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகள் முற்றுமுழுதாக வாபஸ் பெறப்படுதல் போன்ற மாற்றமுடியாத பாதுகாப்பு உறுதிப்பாடுகளை அமெரிக்காவிடம் கோருவதற்குத் தாம் கடமைப்பட்டுள்ளதாகவும் வடகொரியா அறிவித்துள்ளது. வடகொரியாவில் இருந்து எந்தத் தாக்குதல்களையும் எதிர்கொள்ளத்தக்க கையில் அமெரிக்கா தென் கொரியாவில் 37ஆயிரம் படைகளை நிறுத்தியுள்ளது.


1950ல் மூன்று வருட கொரியப்போர் ஆரம்பமாவதற்கு முன்னரும் அமெரிக்கா தென் கொரியாவில் தனது படைகளை நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடகொரியாவின் ஆயுதங்களைக் களையும் நோக்கிலேயே அமெரிக்கா அதனது அணுத் திட்டங்களை முற்றாகக் களையும்படி அமெரிக்கா தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதாகவும்,

அதேநேரம் வடகொரியா தனது அணுவாயுதங்கள், அணுத் திட்டங்கள் குறித்து அமெரிக்காவுடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாகவும் ஆனால் அணுவாயுதங்களுடன் தொடர்பற்ற ஏனைய அணுத்திட்டங்களை கைவிடத்தயாராக இல்லை என்றும் வடகொரியா கூறியுள்ளது. இதனை வடகொரியாவின் அரச செய்திநிறுவனம் இதனைத் தெரிவித்துள்ளது என்று ரொடேங் சின்மன்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## எச்சரிக்கை!

வெனிசுவெலா மீது அமெரிக்கா படையெடுத்தால் அந்தப் போரை 100வருடங்களுக்கு எதிர்கொள்வோம் என சனாதிபதி ஹூகோ சாவெஸ் தெரிவித்துள்ளார். நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு அமெரிக்காவே காரணம் என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.



காஸா பகுதிக்குள் நுழைந்த இஸ்ரேலிய டாங்கிகள் மீது கற்களை வீச தயாராகும் பலஸ்தீனர்களை படத்தில் காண்க.

# கெயிட்டிக்கு ஐ.நா. அமைதிப்படை ஜூன் முதல் செயற்பட ஆலோசனை

## -வன்முறைகள் தலைதூக்க ஆரம்பம்

கெயிட்டியை மறுசீரமைக்க உதவுவதற்காக வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியில் இருந்து அமைதிகாக்கும் படையைப் பணியில் அமர்த்த ஐ.நா திட்டம் தீட்டி வருகின்றது.

இதற்கமைய கெயிட்டியிக்குத் தேவையான அமைதிப்படையின் அளவு, பொலிஸ் அதிகாரிகள், அரசியல் ஊழியர்கள் குறித்து ஐ.நா. தலைமைச் செயலாளர் கொபி அனானிடம் பரிந்துரைக்க ஐ.நா. குழு ஒன்று நேற்று கெயிட்டிக்குச் சென்றுள்ளது.

கொபி அனானின் கெயிட்டிக்கான சிறப்பு ஆலோசகர் றெஜினோல்வல்ட் முதல்முறையாக அடுத்த வாரம் கெயிட்டி செல்லவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை கெயிட்டி ராஜ்யத்தின் மீது இடம்பெறும் சர்வதேச தலையீடுகளுக்கு எதிராக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிக்குமாறு கெயிட்டியின் முன்னாள் சனாதிபதி மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை கெயிட்டியில் வன்முறைகளுடனான ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த ஞாயிறன்று கெயிட்டி முன்னாள் சனாதிபதி அரிஸ் டைட்டிற்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் அரிஸ்டைட் ஆதரவாளர்கள் நடத்தியதாக்கு தலில் ஆறுபேர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

# கயிறிழுக்கும் போட்டியில் யானைக்கு தொடர் வெற்றி

(டெல்அவிவ்)

யானையைக் கயிறு கட்டி இழுக்கும் விநோத போட்டிஒன்று ஜெருசலேமில் நடந்தேறியுள்ளது.

இஸ்ரேலில் யூதர்கள் கொண்டாடும் பூரித் திருவிழாவை அடுத்து, இந்த வித்தியாசமான போட்டிஜெருசலேமில் நடைபெற்றது.

யானையின் உடலில் கயிறு கட்டப்பட்டிருக்கும். இதனை இழுக்கவீரர்கள் களத்திலிறங்கினர். ஆனால் யானை சிறிது கூட அசைந்து கொடுக்காது அப்படியே நின்றதுடன், யானை வேறு பக்கமாக அவர்களை இழுத்தும் சென்றது. இதனால் போட்டியாளர்கள் வழுக்கி விழுந்தனர்.

களைக்காமல் இழுத்துப் பார்த்தவர்கள் களைத்துப் போகும் வரை யானை அசைந்து கொடுக்கவில்லை.

இறுதியில் யானையே வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்டது.

இந்த பூரித்திருவிழாவில் கடந்த நான்கு ஆண்டுகளாக இதேயானை தொடர்ந்து வெற்றியீட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவுக்கு எதிரான கருத்துக்களை தவிர்க்குமாறு அரிஸ்டைட்டுக்கு ஆலோசனை!

## -தென்னாபிரிக்கா தஞ்சமளிக்க பரிசீலனை

கெயிட்டியின் முன்னாள் சனாதிபதி அரிஸ்டைட் தன்னைக் கடத்திச் சென்றார்கள் என்று பிரான்ஸ் மீதும் அமெரிக்கா மீதும் வழக்குத் தொடர இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரிஸ்டைட்டின் சட்டத்தரணி ஹில்பேட் கருத்துத் தெரிவிக்கையில ; கெயிட்டியில் உள்ள பிரான்ஸ் தூதருக்கு எதிராகவும் அமெரிக்காவின் இராணுவத் தளபதிக்கு எதிராகவும் வழக்குத் தொடரப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

புஷ் நிர்வாகத்தையும் பிரான்ஸ் அரசாங்கத்தையும் இலக்காக வைத்து இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன என்றும் அவர் கூறினார்.

முன்னாள் சனாதிபதி அரிஸ்டைட்நடத்தியசெய்தியாளர் மாநாட்டில் உரைநிகழ்த்துகையில் ;

அமெரிக்கத் தலைமையிலான நாடுகளினால் தான் கடத்தப்பட்டதாகவும் தற்போது கெயிட்டியில் தற்போதைய நிர்வாகத்திற்கு எதிரான நடவடிக்கைகள் அமைதியான முறையில் நடைபெற வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரிஸ்டைட் தான் கடத்தப்பட்டதாகக் கூறியதை வாஷிங்டன் மறுத்துள்ளது.

இது இவ்வாறிருக்க, அமெரிக்காவிற்கு எதிராக அரிஸ்டைட் தெரிவித்த குற்றச் சாட்டுக்களை அடுத்து மத்திய ஆபிரிக்கக் குடியரசு நாடான மொறோக்கோ அதிகாரிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். அத்துடன் செய்தியாளர் மாநாடுகளில் கெயிட்டி பற்றிக் குறிப்பிடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் அரிஸ்டைட் கேட்கப்பட்டுள்ளார்.

அரிஸ்டைட்டிற்கு ஆதரவு தெரிவித்து வந்த தென்னாபிரிக்கா அவருக்கு உத்தியோகபூர்வ ரீதியில் அரசியலில் தஞ்சம் அளிப்பதுபற்றி ஆராயப்படும் என்றும் தெரிவித்துள்ளது.





சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு புதுடில்லியில் நடைபெற்ற பேரணியொன்றில் கலந்துகொண்ட பெண்கள். பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த மௌன ஊர்வலத்தை நடத்தினர்.

# 14 ஆக வாக்களிக்கும் வயதைக் குறைக்க அமெரிக்க சனநாயகக் கட்சி பரிந்துரை!

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் வாக்களிப்பதற்கான உரிமைபெறும் வயதை 18 இல் இருந்து 14 ஆகக்குறைக்குமாறு கலிபோனியா மாநிலத்தைச் சேர்ந்த நான்கு ஜனநாயகக் கட்சியினர் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்கள்.

இந்தப் புதிய பிரேரணையின் பிரகாரம் 14 வயதிற்குக் குறையாத 18 வயதிற்கு உட்பட்டவர்களும், மாநிலம், உள்ளூராட்சித்தேர்தலில் வாக்களிக்கஉரிமை பெறுவார்கள்என்று கூறப்படுகின்றது. எவ்வாறாயினும் 18 வயதிற்கு மேற்பட்டவாக்களிப்பு உரிமைபலம் 18வயதிற்கு குறைந்தவர்களுக்கு இருக்காது என்று கூறப்படுகின்றது.

14 முதல் 15 வரையிலானவர்கள் வாக்களிப்புச் செய்தால் அவர்களின் வாக்கு கால்வாசி வாக்காகவே கருதப்படும்.

16 அல்லது 17 வயதுடையவர்கள் வாக்களித்தால் அது அரைவாசி வாக்காகவே கருதப்படும்.தேர்தல் முடிவுகளை நிர்ணயிப்பதில் சிக்கல் ஏற்படும் போது இவர்களது வாக்குகள் முக்கிய பங்காற்றுமென்பதால், இவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்குமாறு சனநாயகக் கட்சியினர் யோசனை சமர்ப்பித்துள்ளார்கள்.

# பெண்களுக்கு அதிக அதிகாரம்

காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் பெண்கள் கூடுதல் அதிகாரங்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி கூறியுள்ளார்.

பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான அரசு பெண்களின் பலத்தைக் கண்டு அச்சப்படுகின்றது. அதனால்தான் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு பிரேரணை இதுவரை நிறைவேற்றப்படவில்லை. ஆனால் பெண்களின் பங்களிப்பினாலும்தான் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

# குவைத் நிதியமைச்சர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

குவைத்தின் நிதி அமைச் சருக்கு எதிராக நம்பிக்கையில் லாத் தீர்மானம் ஒன்றை பத்துப்பாராளுமன்ற உறுப்பினர்கள் குவைத் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. இதில் அரச நிதியை வீண் செலவு செய்தார் என்றும், அவரது நிர்வாகம் முறைகேடாக அமைந்தது என்றும் அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐம்பது அங்கத்தவர்களைக் கொண்ட குவைத் பாராளுமன்றம் இந்த நம்பிக்கையில்லாத்தீர்மானம் தொடர்பாக ஆராயவுள்ளது.

# குண்டுவெடிப்பில் பலியானோருக்கு லிபியா இழப்பீடு வழங்கல்

பிரான்சின் யூ.ரி.ஏ. விமானம் 1989ஆம் ஆண்டு குண்டுத்தாக்குதலுக்கு உள்ளான வேளை அதில் கொல்லப்பட்ட170 பேருக்கு சுமார்170மில்லியன் டொலர் கள் பாரிஸ்சில் வைத்து நஷ்ட ஈடாக வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாரிஸ்சில் வைத்து நஷ்டஈடுவழங்கப்பட்ட போது லிபிய அதிபர் முகமட் கடாபியின் மகன் சாகுல் ஸ்லாம் விடுத்தஅழைப்பைஏற்று பிரான்ஸ் பிரதமர் ஜக்ஸ் சிராக் விரைவில் லிபியாவிற்கு வர உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த யூ.ரி.ஏ. வானூர்திக் குண்டுவெடிப்பிற்கு லிபியாவே பொறுப்பு என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விமானத்தாக்குதலை லொக்கபி தாக்குதல் என குறிப்பிடப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கடந்த வாரத்தில்....

## 01.03.2004 – 07.03.2004

**1**.* துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஐ.தே.க. மட்டக்களப்பு வேட்பாளர் சின்னத்துரை சுந்தரம்பிள்ளை மீண்டும் சுடப்பட்டு மரணமானார்.

* தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையை தமிழ்மக்களின் தேசியத் தலைமையாகவும், வி.புலிகளை தமிழ் மக்களின் உண்மையான ஏக பிரதிநிதி களாகவும் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது.



தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

* திருமலை மாவட்ட அரசாங்க அதிபரும், தெரிவத்தாட்சி அதிகாரியுமான காமினி-றொட்ரிக்கோ பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மாவட்ட பொலிஸ் உபஅதிகாரிகள் ஆகியோரை சந்தித்து திருமலை மாவட்டத்தின் தேர்தல் ஏற்பாடுகள் பற்றியும் அது தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடினார்.

* க.குழு தலைமை அலுவலக பாதுகாப்பு நடவடிக்கை வவுனியா மாவட்ட நடவடிக்கை அதிகாரி போக்சன் க.குழு வவுனியா மாவட்ட அலுவலகத் தலைவர் யோகான் ஒஸ்காகன் க.குழு தலைமை அலுவலக அரசியல் ஆலோசகர் டனிஅனன் க.குழு வவுனியா மாவட்டப் பிரதிநிதி யாரி விடமாட்டா ஆகியோர் விளக்குவைத்த குளம் பகுதியில் த.வி.புலிகளின் தமிழீழ காவல்துறை சிறப்புப் படையணி தளபதி லலித, மணலாறுப்பகுதிப் பொறுப்பாளர் மாறன், சிலோன் தியேட்டர் பகுதிப் பொறுப்பாளர் வசந்தன் ஆகியோரைச் சந்தித்துத் தென்பகுதி முன்னரங்க நிலைகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

* கிளிநொச்சி மாவட்ட தொழில் திணைக்களத்தின் புதிய கட்டடம் கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

**2**. * தர்மராஜ்ய முறை உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் ஜாதிக ஹெல உறுமயவின் தேர்தல் விஞ்ஞாபனம் தலதா மாளிகையில் வைத்து வெளியிடப்பட்டது.

* மட்டக்களப்பு மாவட்ட கல்விச் சமூகம் அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டு வருவதைக் கண்டித்து 50 ஆயிரத்திற்கு அதிகமான மாணவர்கள் கலந்து கொண்ட 60Km நீளமான மனிதச் சங்கிலி போராட்டம் நடைபெற்றது.

* யாழ்.மாட்டின் வீதியில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் கூட்டமைப்பினரைச் சந்தித்த சர்வதேச தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் யாழ் மாவட்டத்தில் ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) ஆனந்த சங்கரியின் சுயேட்சைக் குழு ஆகியன தமிழ் மக்களின் அபிலாசைகளிற்குப் புறம்பாக போட்டியிடுவதால் ஏற்படும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்தனர்.

* தேசிய லொத்தர் சபையினை சனாதிபதி பொறுப்பேற்றார்.

* ஷியா முஸ்லிம்களின் புனித நாளில் ஈராக்கின் பாக்தாத் மற்றும் ஹார்பலா நகரங்களில் குண்டுவெடித்ததில் 143பேர் பலியாகினர். 400ற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

* பாகிஸ்தானில் குண்டு வெடித்ததில் 37பேர் பலி, 100பேர் காயம்.

**3**. * இந்து, கிறிஸ்தவ மதகுருமார்களின் நல்லாசியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்தனர்.

* நேபாளத்தில் மாவோஜிஸ்ட் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 27 நேபாள அரச படையினர் கொல்லப்பட்டனர்.

* செம்மணி வீதி கல்வியங்காட்டுப் பகுதியில் எலும்புக் கூடுகளுடன் பெண்கள் அணியும் உடைகளும் மீட்கப்பட்டன.

* காலித்துறைமுகத்தில் தரித்து நின்ற இந்தோனேசியா மீன்பிடிப் படகு எரிந்து அழிந்தது.

* பொதுத் தேர்தலை கண்காணிப்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையிலான ஒப்பந்தம் கைச்சாத்தானது.

**4**.* கிழக்கில் நிலவும் தற்காலிக நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணப்படும் என க.குழு தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரோன் பியூ ஹொவ்டேயிடம் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் தெரிவித்தார்.



ஹொவ்டேயுடன் சந்திப்பு

* வெனிசுவெலாவில் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் ஐ.நா ஸ்தாபனத்தின் வெனிசுவெலா தூதுவர் இராஜினாமா செய்தார்.

**5**. * பொதுத் தேர்தலில் போட்டியிடும் 15 கட்சிகளின் செயலாளர்கள் தேர்தல்ஆணையாளரைச் சந்தித்து வடக்கு கிழக்கு பகுதித் தேர்தல், தேர்தல்நடத்தும் முறை, ஊடகங்களில் கட்சிக்கான நேர ஒதுக்கீடு என்பன குறித்து கலந்துரையாடினர்.

* வெலிக்கடைச் சிறைக்கைதிகளில் இரண்டு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் 20ற்கும் அதிகமானோர் படுகாயம்.

**6**. * மட்டு-அம்பாறை விசேட தளபதியாக ரமேஸ், தளபதியாக ராம், துணைத்தளபதியாக பிரபா, அரசியல் துறைப்பொறுப்பாளராக கௌசல்யன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் புலிகள் அமைப் பில் இருந்து கருணா நீக்கப்பட்டதாகவும் வி.புலிகளின் தலைமைச் செயலகம் அறிவிப்பு.



* வெலிக்கடைச்சிறையில் மீண்டும் பாதாள உலகத்தினரிடையே ஏற்பட்ட மோதலில் 4சிறை அதிகாரிகள் உட்பட 20 கைதிகள் காயம்.

* நிதர்சனம் நிறுவனத்தின் சிறப்பு வெளியீடான இயக்குனர் ந.கேசவராஜனின் "அம்மா நலமா?" முழு நீளத்திரைப் படம் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.



வெளியீட்டு நிகழ்வில்

**7**.* 500 கடற்படையினருடன் தாய்லாந்து யுத்தக்கப்பல் இலங்கை வந்துள்ளது.

* பலஸ்தீனத்தின் காஸாப்பகுதியில் உள்ள பலஸ்தீன அகதிமுகாமினுள் இஸ்ரேலிய துருப்புக்கள் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர், பலர்காயம்.

* கொழும்பு- கனே முல்லையில் உள்ள இராணுவ கொமாண்டோ படைப்பிரிவின் தலைமையகத்தில் வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் அடங்கிய கொள்கலன் வெடித்துச் சிதறியது.

# எந்த அடிப்படையில் புலிகளுடன் பேச்சு என்பதை விளக்க வேண்டும்

## -சனாதிபதியிடம் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

சனாதிபதி எந்த அடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தையை நடத்தப் போகிறார் என அவர் தெளிவுபடுத்த வேண்டும் என பிரதமர் ரணில்விக்கிரமசிங்க மீண்டும் கோரியுள்ளார். தெனியாய நகரில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் ஐக்கிய தேசியக்கட்சி பொய்யான சமாதானத்தைக் கொண்டு வருவதாக சனாதிபதி கூறிவந்தார். எனினும் தற்சமயம் ஐக்கிய தேசியக்கட்சி ஏற்படுத்திக்கொண்ட போர்நிறுத்த உடன்பாட்டை ஏற்றுக் கொள்வதாகக் கூறும் அதே வேளை தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால யோசனைகள் அடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்தத் தயார் என கூறுகிறார்.இதுமுன்னர் கூறியதற்கு முரணான நடவடிக்கையாகும். எனவே சனாதிபதி தாம் சமாதானத்தை முன்னெடுத்துச்செல்லும் செயற்பாட்டை தெளிவாக விளக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்ட பிரதமர், சனாதிபதி தமது கேள்விக்குப் பதிலளிக்காமை சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# தேர்தலுக்கு உதவி வழங்க விமானப்படை தயாராம்!

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போதுமுழுமையான உதவிகளை வழங்குவதற்கு விமானப்படை இணங்கியுள்ளது. விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல், டொனால்ட் பெரேரா இதற்கான உறுதி மொழியை தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவுக்கு வழங்கியுள்ளார். இதன் அடிப்படையில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்கு வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்ல, மற்றும் அவசர உதவிகளை விமானப்படை மேற்கொள்ளும். அதேவேளை பொலிசாருக்கு உதவியாகவும் விமானப்படை வீரர்களும் பணிகளில் ஈடுபடவுள்ளனர். (32)

# இராணுவ வாகனம் மோதி பாடசாலை மாணவன் படுகாயம்

(செட்டிகுளம்)

வவுனியா-மன்னார் வீதியில் நேற்றுமுன்தினம் காலை இராணுவ வாகனம் மற்றும் பாரஊர்தி என்பன மோதிக் கொண்டன. இதன்போது யாரும் காயமடையவில்லை. எனினும் வாகனம் பாரியளவில் சேதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது இவ்வாறு இருக்க நேற்றுமுன்தினம் காலை வவுனியா கண்டிவீதியில் இடம்பெற்ற வீதிவிபத்தில் இராணுவ வாகனம் மோதி பாடசாலை மாணவனொருவர் காயமடைந்துள்ளார். இராணுவ வாகனம் அதிக வேகமாக வந்தமையே காரணம் என்று நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (21)

# யாழ். தேர்தல் கண்காணிப்புக்கு கண்காணிப்பாளர் திரட்டப்படுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ள கண்காணிப்பாளர்களில் ஒரு தொகுதியினர் யாழ். மாவட்டத்திலிருந்தும் திரட்டப்படுவர் என "பவ்ரல்" என்னும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் பி. நிர்மானுஜன் தெரிவித்துள்ளார்.

வரும் பொதுத் தேர்தலில் ஒன்றையொன்று நிராரிக்கும் கொள்கைகளையுடைய பல கட்சிகள் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுகின்றன. இதனால் யாழ். மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள 582 வாக்குச் சாவடிகளிலும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் கடமையாற்றவுள்ளனர். (33)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மகாவித்தியாலய பழைய மாணவர்சங்க புதியநிர்வாகிகள் திங்களன்று தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக ம.அன்ரனி ஜெயநாதன், செயலாளராக புஸ்பராசா,பொருளாளராக செ.பூலோகசீலன் ஆகியோருடன் 9 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்பட்டது. தொடர்ந்து அபிவிருத்திப் பணிக்கு அனைத்து பழைய மாணவர்களும் தம்மால் இயன்ற அளவு நிதிவழங்குவதாகக் கூறியமை குறிப்பிடத்தக்கது.(20)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பரீட்சை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைமாணி பகுதி-II-2001 (வெளிவாரி),சிறப்புக் கலைமாணி பகுதி-II-2001 (வெளிவாரி) பரீட்சைகள் 15-03-2004 (திங்கட்கிழமை) தொடக்கம் நடாத்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இம்முறை இப்பரீட்சைகள் வவுனியா வளாகத்தில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்தில் நடைபெறமாட்டாது. நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் அலுவலக நேரத்தில் 10.03.2004 முதல் யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக் கொள்ளலாம்.

கலை முதற்தேர்வு கல்வியாண்டு 2001/2002, வணிக முதற் தேர்வு கல்வியாண்டு 2001/2002, கலைமாணி பகுதி - I, கல்வியாண்டு 2001/2002, நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) 2001/2002

ஆகிய கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடிகளாக பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய பதிவேட்டினை 05.03.2004 வெள்ளிக்கிழமை முதல் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பி.ப.2.00 மணி முதல் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசிஎண்ணுடன் தொடர்பு கொள்ளலாம் எனப் பதிவாளர் அறியத் தருகிறார்.

## மு.கா.வின். கோரிக்கைக்கு அமைய

# சம்மாந்துறைப் பிரதேசத்தில் புதியபிரதேச செயலர் பிரிவு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறைப் பிரதேசத்தில் புதிய பிரதேச செயலர் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இறக்காமம் என அழைக்கப்படும் இந்தப் புதிய செயலர் பிரிவிற்குள் 12 கிராம சேவகர் பிரிவுகள் அடங்குகின்றன. இதேவேளை சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசினால் 1992ஆம் ஆண்டில் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே இந்தப் புதிய பிரதேச செயலகப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# கருணாவின் துரோகம்

# விடுதலைப்புலிகளுக்கு மட்டுமானதல்ல!

இன்று தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல, அரசியல்நோக்கர்கள், ஆய்வாளர்கள் மத்தியில் உள்ள பிரதானமான கேள்வி கருணா ஏன் இவ்வாறு நடந்து கொண்டார் என்பதே. அதாவது யுத்த நிறுத்தம் அமுலில் உள்ள போதும் தமிழ் மக்கள் தமது தேசிய எழுச்சியை வெளிப்படுத்தும் நோக்கிலும் தேர்தல் ஒன்றை எதிர்கொண்டுள்ள வேளையில்-சர்வதேச சமூகம் அதன் முடிவை எதிர்பார்த்துள்ள நிலையிலும் கருணா அவற்றிற்கு மாறாக ஏன் இவ்வாறு நடந்து கொண்டுள்ளார் என்பதேயாகும்.

கருணா குறிப்பிடுவது போன்று மட்டு- அம்பாறை மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டதனால் இத்தகையதொரு நிலைப்பாட்டை மேற்கொண்டார் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க வாதமல்ல. அதுவுமல்லாது மட்டு. அம்பாறை மாவட்டங்கள் தமிழீழத் தேசியத்தலைமையினால் புறக்கணிக்கப்பட்டதாக ஒரு பேச்சுக்குத்தான் வைத்துக்கொண்டாலும் கூட -கருணா தனது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கு இக்காலப் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டது ஏன்?

அண்மையில் அவரால் மட்டு-அம்பாறை மாவட்டத்திற்கென ஏதாவது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டனவா? அன்றி மட்டு-அம்பாறை மாவட்டத்திற்கு பாதகமான நடவடிக்கைகள் எதையாவது விடுதலைப் புலிகளின் தலைமை மேற்கொண்டதா? அவ்வாறு எதுவும் நிகழ்ந்ததாக இல்லை. இதேவேளை தமிழீழத் தேசியத் தலைவர் ஆயிரம் போராளிகளை அனுப்புமாறு கோரியமையே முரண்படுவதற்கும், பிரிந்து செல்வதற்குமான காரணியெனக் கருணா கூறுவது எந்தளவு பொருத்தப் பாடானது.

ஒரு புறத்தில் தற்பொழுது யுத்தமோ, யுத்தத்திற்கான - தயாரிப்புகளோ எவையுமே நடைபெறுவ்தாக இல்லை. இந்நிலையில் போராளிகளை அனுப்புமாறு கோரினார் என்பதே வடக்கில் போரிட போராளிகளை அனுப்பப்போவதில்லை என்பதோ பொருத்தப்பாடானதொன்றல்ல. அவ்வாறு அனுப்புவதற்கு தான் விரும்பவில்லை என்றால் கூட அதனை உரிய முறையில் அல்லவா வெளிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

இதேவேளை ஒரு விடுதலை இயக்கமாயினும் சரி ஒரு நாட்டு இராணுவமாயினும் சரி போராளிகளையும் துருப்புக்களையும் ஒருங்கிணைப்பதும், போரிடுவதும், யுத்த தந்திரோபாயத்தின் பாற்பட்டதே யொழிய பிராந்திய ரீதியிலான பொறுப்பானவர்களின் விருப்பு வெறுப்பின்பாற்பட்டதல்ல.

அதுமாத்திரமல்ல எதிரிகளை எங்கோ ஒரு பகுதியில்-எமக்குச் சாதகமானதொரு கள முனையில் தோற்கடிப்பதன் மூலம் ஒட்டுமொத்தமானதொரு வெற்றியை தேடிக்கொள்வதே இராணுவ ரீதியிலான மதிநுட்பமாகும். இந்த வகையில் வடக்குப் போர் முனையென்றால் என்ன? கிழக்குப் போர் முனையென்றால் என்ன? படைகளை ஒருங்கிணைப்பதும் தாக்குதல்களை மேற்கொள்வதும் வெற்றியைத் தேடிக் கொள்வதுமே பொருத்தப்பாடான தந்திரோபாயமாக இருக்க முடியும்.

'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது சிறிலங்கா இராணுவத்தின் போரிடும் ஆற்றலுள்ள சகல டிவிசன் படைகளும் யுத்த முனையில் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக 53, 54,55,56 வது டிவிசன்களுடன் 52 வது டிவிசனும் பயன்படுத்தப்பட்டது. இந்நடவடிக்கையில் விடுதலைப் புலிகளை முறியடித்து விட்டால் விடுதலைப் போராட்டமே முடிவிற்குக் கொண்டுவந்து விடப்படும் என்பது அவர்களது தீர்மானமாகும். இதேவேளை அவரை எதிர்த்துப் போரிட்ட விடுதலைப் புலிகளும் அதை ஒத்த குறிக்கோளே இருந்தது. ஜயசிக்குறு நடவடிக்கைகளில் சிறிலங்கா இராணுவத்தை தோற்கடித்தால் அதை ஒரு போரிட முடியாத இராணுவமாக முடக்க முடியும் என்பதே புலிகளின் எதிர்பார்ப்பாகும். இந்நிலையில் விடுதலைப் புலிகளின் படையணிகளும் வடக்கு-கிழக்கு எங்குமிருந்தே திரட்டப்பட்டன.

ஒட்டுமொத்தத்தில் இந்நடவடிக்கையானது இரு தரப்பினரதும் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒன்றாகவே இருந்தது. இதில் யார் வெற்றி பெறுகின்றனரோ அவர்களுக்கு இராணுவ ரீதியிலான மேன்மை கிடைப்பது தவிர்க்கப்பட முடியாத தொன்றாகவே இருந்தது. இவ்வாறே புலிகளின் இராணு மேலாண்மை உயர்ந்தது. இதேவேளை இவ் இராணுவ ரீதியிலான மேலாண்மை என்பது தனியாக வடக்கிற்கோ-கிழக்கிற்கோ என்பதல்ல. தமிழர் தாயகப் பகுதி எங்குமேயாகும்.

எடுத்துக்காட்டாக இன்று கருணா தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறிக்கொள்ளும் மட்டக்களப்பு- அம்பாறைப் பகுதிகள் அங்கு போரிட்டுப் பெறப்பட்ட வெற்றிகளால் கிடைக்கப்பெறவில்லை. ஜயசிக்குறுவிற்கென இராணுவம் தனது படைகளைத் திரட்டியபோது அங்கு ஏற்பட்ட இடைவெளிகளினால் பெறப்பட்டதாகும். அதாவது 'ஜயசிக்குறு' முறியடிப்பால் கிடைக்கப்பெற்ற ப பலனாகும்.

ஆகையினால் போரில் வடக்கிற்காகப் போரிட்டதாகவோ, கிழக்கிற்காகப் போரிட்டதாகவோ கூறிக்கொள்ளுவதென்பது தவறு. தமிழர் தாயகத்திற்காகப் போரிட்டோம். அதில் வடக்கிலும் கிழக்கிலுமாக பெரும்நிலப்பரப்பு எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டு வரப்பட்டது என்பதே உண்மை.இதைவிடுத்து தமிழர் தாயகத்திற்காகப் போரிட்டு மடிந்த மாவீரர்களை பிரதேச வாதத்திற்குள் கருணா உட்படுத்த முற்படுவதாவது அவரின் வரட்டுத்தனமான சிந்தனையையும் குறுகிய நோக்கிலான அணுகுமுறையையுமே எடுத்துக்காட்டுவதாயுள்ளது.

அடுத்ததாக இன்று தமிழ் மக்கள் தமது தேசிய எழுச்சியை சர்வதேசத்தின் முன் நிரூபிப்பதற்காக முற்பட்டுள்ள ஒரு காலகட்டமாகும். இதற்கென தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு தமிழ்த் தேசிய எழுச்சியை வெளிப்படுத்துவதற்கு எதிர் வரும் ஏப்ரல் 2ம் திகதி நடைபெறவுள்ள தேர்தலை பயன்படுத்திக்கொள்ள முற்பட்டு நிற்கும் வேளையாகும். இதற்கு வடக்கு-கிழக்கிற்கு அப்பால் வாழும் மக்களையும் அணிதிரட்டுவதற்காக சிறியளவிலாயினும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுமுண்டு.

இக்காலப் பகுதியில் தமிழ்த் தேசிய எழுச்சிக்கு ஊறு விளைவிக்கும் நடவடிக்கைகளை யார் மேற்கொண்டாலும் அது தமிழ் இனத்திற்கு துரோகம் இழைக்கும் நடவடிக்கையாகவே கொள்ளத்தக்கதாகும். இத்தகையதொரு சூழ்நிலையில் கருணா தமிழ்த் தேசியத்தை பாதிக்கத்தக்க வகையில் நடந்துகொண்டது ஏன்? மட்டு-அம்பாறை மக்களின் பெயரால் தமிழ்த் தேசியத்துக்கு அவர் விளைவிக்கும் குந்தகம் மட்டு- அம்பாறை தமிழ் மக்களுக்காயினும் நன்மை பயக்கத் தக்கதா?

கருணாவின் தற்போதைய நடவடிக்கைகளுக்கு அடிப்படையில் இருக்கக் கூடிய காரணிகள் இரண்டு மட்டுமே.

1. அவர் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஒழுங்கு விதிகளுக்கு மாறான வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.

2. தமிழ்த் தேசிய வாதத்திற்கெதிரான உள்நாட்டு வெளிநாட்டு சக்திகளுக்கு அவர் விலைபோயிருத்தல் வேண்டும்.

கருணாவின் செயலுக்கு இவ் விரண்டு காரணிகளில் ஏதாவது, ஒன்றாகவும் இருக்கலாம், சிலவேளை இரண்டுமே ஒருமித்த நிலையில் இணைந்ததாகவும் இருக்கலாம். கருணாவை பொறுப்பிலிருந்து நீக்குவது தொடர்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச்செயலக அறிக்கையானது கருணாவிற்கு பின்னால் சில தீய சக்திகள் இருப்பதாகத் தெரிவிக்கின்றது. ஆயினும் எவரையுமே, எந்த நாட்டையுமோ அது சுட்டிக்காட்டவில்லை.

ஆயினும், கருணாவின் செயலுக்கு சிறிலங்கா ஆட்சியாளர்களில் ஒரு தரப்பின் குறிப்பாக, சனாதிபதி சந்திரிகாவின் தரப்பின் ஆதரவு இருப்பதாகவே ஊகிக்க முடிகிறது. எடுத்துக்காட்டாக, சனாதிபதியின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகத்துறை கருணாவிற்கு கொடுக்கும் முக்கியத்துவம் மற்றும். விடுதலைப்புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் வெளியிடும் தகவல்கள் இதனையே வெளிக்காட்டுவதாய் உள்ளது.

கருணாவின் பின்னால் உள்ள தீய சக்திகள் அவை உள்நாட்டு சக்திகளாக இருப்பினும் சரி, வெளிநாட்டு சக்திகளாக இருப்பினும்சரி தற்பொழுது அவை இத்தகையதொரு நகர்விற்குச் சென்றதற்குக் காரணம் என்ன? அதாவது யுத்தம் ஓய்ந்துள்ள நிலையில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடைபெறலாம் என்ற நிலையிலும் இத்தகையதொரு குழப்பத்தை ஏற்படுத்தி வடக்கு- கிழக்கின் ஸ்திர நிலையை குழப்பியதற்கு வேண்டி தேவை தான் என்ன?

இங்குதான் ஏப்ரல் 2ம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. இத்தேர்தலானது நிச்சயம் தமிழ் மக்களின் தேசிய எழுச்சியினை வெளிப்படுத்தும் ஒன்றாக அமையும் என பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. அதுமட்டுமல்ல, இத்தேர்தலானது சிறிலங்கா அரசாங்கத்தைத் தீர்மானிக்கும் வலுவைத் தமிழருக்குக் கொடுக்குமெனவும் அரசியல நோக்கர்களால் எதிர்வு கூறப்பட்டது.

ஆனால் இவை எவையுமே சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளுக்கோ தமிழ் மக்க ளின் உரிமைப் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட வெளி நாட்டுச் சக்திகளுக்கோ உவப்பானதாக இருக்கவில்லை.

தமிழரின் தேசிய எழுச்சியை மழுங்கடித்துவிட அவர்கள் ஏற்கனவே மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ள நிலையில் புதியதொரு முயற்சியை அவர்கள் மேற்கொண்டிருக்கலாம். இதற்கு அவர்கள் கருணாவின் பலவீனங்களைப் பயன்படுத்திக்கொண்டிருக்கலாம்.

அடுத்ததாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து கருணா புலிகள் இயக்கத்தின் ஒழுங்கு கட்டுப்பாட்டு விதிகளை மீறியுள்ளார் எனக் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளதேயொழிய எந்தவகையில் அவை மீறப்பட்டன என்ற தகவல்கள் வெளியிடப்படவில்லை. ஆனால், தம்மீதான குற்றச்சாட்டுக்கள் எத்தகையவை என்பது அவரால் அறியப்பட்டதாகவே இருக்கும். ஏனெனில் தான் இழைத்த குற்றங்கள் அவரால் அடையாளங் காணத்தக்க வகையில் விடுதலைப்புலிகள் அமைப்பை நன்கே அறிந்துகொண்டிருந்தவராவார்.

இந்நிலையில் தான் தலைமைப் பீடத்தின் அழைப்பை ஏற்று அவர் வன்னிக்குச் செல்லத் தயாராக இருக்கவில்லை. தனது கட்டுப்பாட்டை மீறிய செயல்கள், குற்றச் செயல்கள் என்பனவற்றை மூடிமறைக்கும் வகையில் உணர்ச்சிகரமானதொரு விடயத்தை கையில் எடுத்துக்கொண்டுள்ளர். ஆனால் இது எந்த வகையிலும் மட்டு- அம்பாறை மக்களுக்கு நன்மை பயக்கத் தக்கதல்ல.

கருணாவின் தற்போதைய நடவடிக்கையானது தமிழீழத் தேசியத் தலைமைக்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இழைக்கப்பட்ட துரோகம் என்பது வெளிப்படையானது.அதாவது இயக்கத்தின் கட்டுப்பாடுகள், ஒழுங்கு விதிகள் என்பனவற்றை மீறயதோடு மட்டுமல்ல பல பாதிப்புக்களையும் விளைவிக்கத் தக்கதொன்றாகவே அமையத் தக்கதாகும்.

இதில் குறிப்பாக, தமிழீழத் தேசியத் தலைமையை ஏற்றுப் போராட்டத்தில் இணைந்த போராளிகளை தேசியத் தலைமைக்கு எதிரான கிளர்ச்சிக்குப் பயன்படுத்த முற்படுவதானது அப்பட்டமான துரோகத்தனம் மட்டுமல்ல மோசடியும் கூட.அதுமட்டுமல்ல தமிழீழத் தேசியத் தலைமை மக்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கென வழங்கிய பெருமளவிலான ஆயுத் தளபாடங்கள் தமிழ் மக்களின் நலனுக்கு எதிராகவே பயன்படுத்த முற்படுவதானது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

அத்தோடு கருணாவின் நடவடிக்கையானது தனியாக விடுதலைப் புலிகளுக்கு இழைக்கப்பட்ட துரோகம் மட்டுமல்ல. தமிழ் தேசியத்திற்கும் இழைக்கப்பட்ட துரோகமாகும். அதாவது ஐக்கியப்பட்டு தமிழ் தேசிய எழுச்சியை மக்கள் வெளிப்படுத்த முற்பட்டுள்ள இவ்வேளையில் பிரதேச வாதத்தை கிளப்பியதன் மூலம் மக்கள் மத்தியில்பிரிவினையையும் வேறுபாட்டையும் ஏற்படுத்த மேற்கொண்டிருந்த முயற்சியாகவே கொள்ளத்தக்கது.

ஆனால் விடுதலைப்புலிகளுக்கும், தமிழ் தேசியத்திற்கும் இழைத்த துரோகங்கள் ஒருபுறமிருக்க மட்டு- அம்பாறை மக்களுக்கு இவர் இழைத்துள்ள துரோகமானது மிகவும் உயர்வானது. மட்டு-அம்பாறை மக்கள் தங்கள் பலமே விடுதலைப் புலிகள் தான் என நம்பிக்கொண்டிருக்கையில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் நோக்கில் மேற்கொண்டுள்ள நடவடிக்கையானது மட்டு- அம்பாறை மக்களை பெரியளவில் பலவீனப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவே உள்ளது.

அதாவது கருணா மட்டு- அம்பாறை மக்களை புறக்கணிப்பதாகக் கூறிக் கொண்டு தற்பொழுது மேற்கொண்டுள்ள நடவடிக்கையானது மட்டு- அம்பாறை மக்களை அப்பிராந்தியத்திலேயே பலவீனமானதொரு நிலைக்குத் தள்ளியுள்ளது. அரசியல்- இராணுவ ரீதியில் இப்பலவீனம் வெளிப்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

எடுத்துக்காட்டாக ஏப்ரல் 2இல் நடைபெறவுள்ள தேர்தலில் மட்டு. தேர்தல் மாவட்டத்தில் நான்கு ஆசனங்களையும் அம்பாறை மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களை கைப்பற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு களமிறங்கியது. ஆனால் தற்பொழுது கடந்த தேர்தலில் கிடைத்த ஆதாரங்களையே (மட்டு-03, அம்பாறை-01) தக்கவைத்துக் கொள்வதற்கே பெரும்முயற்சி மேற்கொள்ள வேண்டிய நிலையைக் கருணாவின் நடவடிக்கை தோற்றுவித்துள்ளது.

இராணுவ ரீதியில்பெறப்பட்டிருந்த பலம் கருணாவின் செயலால் சிறிதளவிற்கேனும் பாதிப்பிற்கு உள்ளாகலாம் என்பது நிராகரிக்கப்பட முடியாததே. ஒருபுறத்தில் போராளிகள் மனச் சோர்வு, உற்சாகமின்மை என்பனவும், மறுபுறத்தில் போராளிகள் விடுதலைப் போராட்டத்திலிருந்து ஒதுங்குதல் அதிகரித்த போக்கிலானதாக இருப்பதற்கும் வாய்ப்புண்டு.

இந்த வகையில் கருணாவின் துரோகமானது விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு மட்டுமல்ல தமிழ்த் தேசியத்திற்கும், மட்டு-அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கும் செய்த துரோகமாகவே கொள்ளத்தக்கதாகும். மாறாக சிங்களப் பேரினவாத சக்திகளுக்கும், தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்திற்கு எதிரான சக்திகளுக்கு தமிழ் மக்களின் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்ததாகவுமே இருக்கும். □

**ஜெயராஜ்**

# எக்குறையிருந்தாலும் தலைவரிடமே பேசித்தீர்த்திருக்க வேண்டும்

## சிறப்புத் தளபதி ரமேஸ் செவ்வி

என்ன பிரச்சினையாக இருந்தாலும், என்ன குறைபாடுகளாக இருந்தாலும் கதைத்துப் பேசித் தீர்க்க வேண்டியது எங்கள் தேசியத்தலைவரிடம் தான் என



மட்டு- அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ் பி.பி.ஸி.க்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தலைவர் கூப்பிடும் போது தன்னிலே பிரச்சினை இருப்பதாக விளங்கி, இதற்காகத் தான் தலைவர் கூப்பிடுகின்றார் என்று அதை மூடி மறைப்பதற்காக பல பிரச்சினைகளை தூக்கிப் போட்டு ஒரு பிரதேச வேறுபாட்டை அங்கிருந்த மக்கள் மத்தியில் திடீரென உருவாக்கி பல குழப்பங்களை கருணா ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதே உண்மை.

ஏனெனில், இந்தக்கால கட்டத்தில் அதாவது விடுதலைப் போராட்டம் சர்வதேச மட்டத்திலே ஒரு பாரிய வெற்றியை ஈட்டிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலா இந்தப்பிரச்சினையை இவர் உருவாக்குவது? என அவர் கேள்வி எழுப்பினார்.

பெற்றோர் தமது பிள்ளைகள் வன்னிக்குச் சென்று அங்கு போராளிகளாக அங்கு போர்க்களத்தில் போரிடுவதை எதிர்க்கின்றனர் என்று கருணா கூறுகிறரே எனக் கேட்டதற்கு மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ் பதிலளிக்கையில்;

இது அவராகத்தான் பிரதேச வாதத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். ஏனெனில் ஆரம்ப காலத்திலே குமரப்பா, அருணா அண்ணை தலைமையில் வட பகுதியில் இருந்து படைகள் கிழக்கிற்கு நகர்ந்துள்ளன. அவர்களும் பல ஆண்டுகள் அங்கிருந்து கடமை புரிந்தார்கள். அதன்பின்னர் மட்டு-அம்பாறையில் இருந்தும்வடக்கிற்கு படைகள் சென்றன.

படைகள் நகர்வு என்பது ஒரு இராணுவத் தளபதியினால் தான் திட்டமிடப்படுகிறது.

அதாவதுபடைநகர்வு-படைக்குவிப்பு, படைவிரிப்பு என்பன இராணுவத்தளபதியினால் தான் திட்டமிடப்படுகிறது.

எங்களுடைய இராணுவத் தளபதி எங்களுடைய தேசியத் தலைவர் அவர்களே. எனவே எதிரி இராணுவத்தினுடைய நகர்விற்கு ஏற்றவாறு படை குவிப்பு படைவிரிப்பு என்பது தலைவருடைய ஏற்பாடு. அதாவது இராணுவத்தளபதி யினுடைய திட்டம்.

ஆனால், தற்போதைய கால கட்டத்தில் மட்டக்களப்பில், அம்பாறையில் இருந்து படையை எடுக்கும்படி தலைவர் சொன்னார் என்பது பச்சைப் பொய். அதனை நாங்கள் மறுக்கின்றோம். அப்படி எந்த உத்தரவும் தலைமைப் பீடத்தினால் விதிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

கருணாவிடம் ஆயிரம் போராளிகளை அனுப்புமாறு கோரி இருந்ததாக கேட்கப்பட்டபோது நான்மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டத்தில் இருந்து தான் தலைவரிடம் வந்தேன். அப்படி ஒருதகவலையும் அவர்கொடுக்கவில்லை. அது பொய்யான தகவல். ஏனென்று சொன்னால் தன்னுடைய பிரச்சினையை மூடி மறைப்பதற்கு எங்கெங்கையோ பிரச்சினைகளைத் தேடிப்போட்டு மக்களிடம் புகுத்திக் கொண்டிருக்கிறார். என்றார் ரமேஸ்.

இதேவேளை கருணாவின் ஆதரவாளர்கள் மற்றும் ஜெயந்தன் படையணியினரின் ஆயுதங்கள் களையப்பட்டு அவர்கள் நிராயுதபாணிகளாக உள்ளார்கள் என்ற கூற்றுக் குறித்துக் கேட்டபோது,

அது பச்சைப்பொய்எனத் தெரிவித்த ரமேஸ், கருணா அப்பட்டமான குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார், நான் நினைக்கின்றேன் இவருக்குப்பல குழப்பங்கள் இருக்கின்றது. இவரது முடிவு அடிக்கடி மாறிக் கொண்டிருக்கின்றது. மிகவும் உணர்ச்சி வசப்பட்டு இந்த முடிவுகளை எடுத்துக் கொண்டிருக்கின்றார்.

இங்குள்ள மட்டு,-அம்பாறைப் போராளிகளை நான் இங்கு வந்து பார்க்கும்போது அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

ஏனெனில், தலைவர் மிகவும் கட்டுக்கோப்பிற்குள், கட்டமைப்பிற்குள் போராளிகளை வைத்துள்ளார். ஜெயந்தன் படையணிக்கு இருக்கின்ற சிறப்புத் தளபதி ஜெயாத்தன் என்பவரே அவரை வந்து சந்திக்கும்போது அவர் மிகவும் மகிழ்வாக அந்தப் போராளிகளுடன் இருக்கின்றார் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்ச்செல்வன் போன்ற மிதவாதிகளை அனுப்பி பிரச்சினைகளைத் தீர்த்திருக்க முடியும் என்றும் கடும் போக்காளர்களை அனுப்பித் தீர்க்க முடியாது என்று கருணா தெரிவித்தமை குறித்து ரமேஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

எங்களுடைய விடுதலைப் புலிகள் அமைப்பு என்பது மிகவும் கட்டுக்கோப்பு வாய்ந்தது.

விடுதலைப்புலி ஆகும்போது நாங்கள் ஒரு உறுதிப் பிரமாணம் எடுப்போம். எங்களுடைய தலைமையினுடைய கட்டளையை நிறைவேற்றுவோம். கட்டளையை ஏற்றுப் பணி செய்வோம் என்றுதான் உறுதிப் பிரமாணம் எடுப்போம். அதை மீறுபவர் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்படுவார்கள் என்று சட்டதிட்டங்கள் இருக்கின்றது.தலைவர் அழைத்து அவர் வரவில்லை என்று சொன்னால் கட்டுக்கோப்புக்களை மீறியதற்குச் சமன் என்றார்.

இதேவேளை, எப்போது கிழக்கிற்குச் செல்லப்போகிறீர்கள்? எப்படி நிலையைச் சமாளிக்கப் போகிறீர்கள் என்று கேட்கப்பட்டபோது;

எமது தலைமைப் பீடத்தின் உத்தரவும் இதுதான். மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் இருக்கும் மக்களுக்கோ அன்றி அங்குள்ள விடுதலைப்புலிகள் உறுப்பினர்களுக்கோ சரி எந்த ஆபத்துமின்றி சிறு பிரச்சினைகூடவராதவண்ணம் கையாள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.கருணாவைப் பொறுத்தமட்டில் தலைவர் அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலக்கிய பொழுதுஅவர் தன்னுடைய பிழையை ஒத்துக் கொண்டு சென்றிருக்கலாம். ஆனால், நாங்கள் செல்லும் பொழுது அங்கிருக்கும் போராளிகளை எங்களுக்கு எதிராக யுத்த முனைக்கு அனுப்ப கருணா முயற்சி எடுப்பாரேயானால் அங்குள்ள மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஏனெனில், தமிழீழ விடுதலைக்கு எதிராக எமது மக்களும் போராளிகளும் செயற்படமாட்டார்கள்.

அதை மேற்கொள்ள முயற்சி செய்வாரேயானால் அங்குள்ள மக்களும் போராளிகளும் அதற்கு பதில் சொல்லியே ஆவார்கள். அதாவது அதற்குரிய பதிலடி கொடுத்தே ஆவார்கள்.

நாங்கள் விரைவில் மட்டக்களப்பிற்குச் செல்ல உள்ளோம் என்றும் ரமேஸ் தெரிவித்துள்ளார்.

## வன்முறை 26ஆல் உயர்வு

பொதுத் தேர்தல் வன்முறைகள் மேலும் 26 ஆல் உயர்ந்துள்ளன. இந்த 26வன்முறைகளும் நேற்றுமுன்தினம் காலை 6 மணியுடன் முடிவடைந்த24 மணித்தியாலங்களுக்குள் இடம்பெற்றுள்ளன. இதுவே வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்டபின் ஒருநாளில் நடைபெற்ற அதிக வன்முறைகளாகும்.

## -மனித உரிமைகள் ஆணைக்குழு-

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்கள் வாக்களிப்பது தொடர்பாக ஆராய்வு

(வடமராட்சி)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் சுதந்திரமாக வாக்களிப்பது தொடர்பாக தேர்தல் ஆணையாளருடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுபேச்சுக்களை நடாத்தவுள்ளது.

1978ம் ஆண்டின் இலங்கை அரசியல் யாப்பின் படியும், யாப்புடன் இணைத்துக் கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமை விழுமியங்களின் படி வகுக்கப்பட்ட வழிகாட்டலை அனுசரித்தும் கடைப்பிடித்தும் பிரஜைகளின் சுதந்திரமான வாக்களிக்கும் உரிமையையும் சுதந்திரமாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவும் அத்துடன் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தலில் ஈடுபடுவதையும் இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழு அங்கீகரித்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவி திருமதி ராதிகா குமாரசாமி தெரிவித்துள்ளார்.

இதனிடையே எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கான மக்களது உரிமைகளைப் பேணுவது தொடர்பாக பிராந்திய அலுவலக இணைப்பாளர்களை கொழும்பில் சந்தித்து ஆராய்ந்திருந்தார். கடந்த சனி மற்றும் ஞாயிறு இருதினங்களிலும் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது வட-கிழக்குப் பகுதிகளில் தேர்தல் வாக்களிப்புகளை சுமுகமாக்க மேற்கொள்ளபட வேண்டியநடவடிக்கைகள் தொடர்பில் கூடியகவனம் செலுத்தப்பட்டதாக தெரியவருகின்றது.

(27)

## சமகால அரசியல் கருத்தரங்கு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேசத்தில் சமகால அரசியல்நிலை சம்பந்தமான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை 3மணியளவில் வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் வர்த்தக சங்கத்தலைவர் அம்பாள் தலைமையில் அக வணக்கத்துடன் ஆரம்பமாகியது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் செங்கதிர், நிர்வாகசேவை துணைப் பொறுப்பாளர் இளஞ்சேரன், வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் வேழினி, போராளிகள், வட்டக்கச்சிப் பிரதேச வர்த்தக சங்க அங்கத்தவர்கள் ,வர்த்தகர்கள் என பலதரப்பட்டோர் கலந்து கொண்டனர்.

(12)


ஓராண்டு நினைவலைகள்

பிறப்பு 31 08 1975



வீரச்சாவு 10 03 2003

மேஜர் கந்தன்

தேவராசா- வசீகரன்

புளியங்கூடல்-ஊர்காவற்றுறை

காலத்தின் தேவையறிந்து
கரிகாலன் படையில் இணைந்து
களமாட சென்றவனே எங்களின் விழிகளில்
ஒளிவீசுவாய் என்று எண்ணியிருந்தோம்-இன்று
அத்தனை விழிகளிலும் கண்ணீர் மழை
எங்கள் ஒளி விளக்கு அணைந்து விட்டது
வசீகரனே உன் வசீகரமான திருமுகம்
எம் மனக்கண்களில் வந்து நிற்கின்றது.
வசீகரனே! நீ சென்று ஓராண்டு
என்ன நூற்றாண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சங்களில் உன் வசீகர முகம்
என்றும் வந்து ஒளிவீசும்.

(4056)

த.மு:
அன்புத்திட்டம், ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு.

உன் நினைவுகளைச்சுமந்தபடி
குடும்பத்தினர்

1ம் ஆண்டு நினைவில்

அன்னையின் மடியில் 11 01 1976



கடலின் மடியில் 10 03 2003

ஏபின்சீமன் இளம்பருதி

கிஸ்ணன் – ஜெந்தன்

படை நடத்தி, பகை கதை முடித்து
சர்வதேசக் கடலில் வீரகாவியமானவரே
நீர்கண்ட களங்கள் எத்தனை-கண்ட களங்களில்
ஏற்ற வீரத் தழும்புகள் தான் எத்தனை.
உன் குரல் கேட்கத் தவிக்கின்றோம்
உன் உறவுகளின் கதறலை கேட்டிடமாட்டாயா
உன் தோழர்களின் விம்மலை அடக்கிட மாட்டாயா
உன் புகழுடலைக் கூட எம்மால் பார்க்க
கொடுத்து வைக்கவில்லையே.
எம்மை விட்டு தனித்து எங்கே தூரம்சென்றுவிட்டீர்.
உமது இலட்சியம் பெரியது.
நீர் சுமந்த கனவுகள் அளப்பெரியவை.
நீர் கடந்த பாதைகள் நெடியவை
தலைவன் இட்ட பணி.
நீர் விட்டுச் சென்றபணி.
நாம் தொட்டு தொடர்கின்றோம்.
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

10.03.2003 இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்களையும் நினைவு கூருவதோடு (10.03.2004) அன்று அவரது இல்லத்தில் நடைபெறும். மதிய போசன நிகழ்வில் சகபோராளிகள், உறவினர்கள்,நண்பர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

க.கிஸ்ணன் (தகப்பன்)
பாட்டாளிபுரம் தட்டாங்கண்டல்,
மல்லாவி.

(4291) குடும்பத்தினர்.

## சிந்தனைக்கு



மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மை இது.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 10 -03-2004


## ஏன் இந்தப் பிரயத்தனம்

விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்டத்தளபதி பதுமன் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்; பதுமன் சுட்டுக்கொல்லப்பட்டார்; கருணாவைப் படுகொலை செய்வதற்காக சொர்ணம் தலைமையில் திருமலைக்கு விடுதலைப் புலிகளின் படைப்பிரிவுகள் அனுப்பப்பட்டுள்ளன என்பன போன்ற தகவல்களே கடந்த சில தினங்களாக சனாதிபதி சந்திரிகாவின் கட்டுப்பாட்டிலுள்ள சிறிலங்கா ஊடகத் துறையின் தலைப்புச்செய்திகளாக இடம்பிடித்துள்ளன.

இத்தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை, வேண்டுமென்றே கூறப்படுபவை என்பனவற்றுக்கு கண்டனம் தெரிவிக்கும் நோக்கில் இப்பத்தி எழுதப்படவில்லை. சனாதிபதி சந்திரிகாவின் கட்டுப்பாட்டினுள் லக்ஸ்மன் கதிர்காமர் அமைச்சராக இருக்கும் ஊடகத்துறை எத்தகைய பொய்களையும் கூறத் தயங்க மாட்டாது என்பது எமக்கு அனுபவம் தந்த பாடம்.

ஆனால், தற்பொழுது இவர்களின் இப்பிரச்சாரம் குறித்து சுட்டிக்காட்டுவதற்குக் காரணம் இவர்களின் பிரச்சாரம் எதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதற்காகவேயாகும். ஏனெனில் இப்பிரச்சாரத்தின் *நோக்கமானது வடக்கு-கிழக்கில் பெரும் நெருக்கடிகளுக்கு வித்திடக் கூடியதாகும். அடிப்படையில் இப்பிரச்சாரங்கள் வடக்கு- கிழக்கு தமிழ் மக்கள் இடையில் ஓர் பதட்டமானதொரு நிலையைத் தோற்றுவிக்கத்தக்கவையாகும் அதாவது சகோதரர்களுக்குள் குழப்பத்தைத் தோற்றுவித்து அவர்கள் இருவரையும் பலவீனப்படுத்திவிடும் நோக்கம் கொண்டதாகும்.

அத்தோடு இன்று வடக்கு-கிழக்கில் நிலவும் சமாதான அமைதிச் சூழ்நிலையை முடிவிற்குக் கொண்டுவரும் நோக்கம் கொண்டதாகும். அதாவது வடக்கு-கிழக்கு மக்கள் மத்தியில் முரண்பாட்டையும் அதன் மூலம் பதட்டத்தையும் தோற்றுவித்து தமிழ் மக்கள் மத்தியில் குரோதத்தை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாகும். அது மட்டுமல்லாது, விடுதலைப்புலிகளுக்கும்- கருணாவிற்கும் இடையில் இராணுவ ரீதியிலான மோதல்கள் இடம்பெற்றாலோ அன்றி இரு தரப்பினர் இடையிலான முரண்பாடு நீடித்தாலோகூட அது புலிகள் இயக்கத்தை- அதாவது தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்திவிடும் என்பது அவர்களின் மதிப்பீடாகும். இதன் மூலம் வடக்கிற்கும்-கிழக்கிற்கும் இடையே தெளிவானதொரு முரண்பாட்டைத் தீவிரமாகவும் நிரந்தரமாகவும் ஆக்கிக் கொள்ளுதல் அவர்களின் குறிக்கோளாகும். அவ்வாறு ஆக்கிக் கொள்வதன் மூலம் தமிழரின் தேசியம், தன்னாட்சி உரிமை என்பனவற்றைக் கேள்விக்குள்ளாக்குவதே அவர்களின் நோக்கமாகும். அதாவது, வடக்கு-கிழக்கு இணைப்பு என்ற கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகும்.

சனாதிபதி சந்திரிகா தலைமையிலான கூட்டணியின் நிலைப்பாடானது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதற்கு விரோதமானது என்பது ஏற்கனவே உணரப்பட்டதொன்றுதான். ஆயினும், தேர்தல் காலமாகையினால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்வது பற்றி இக்குழுவும் ஆதரவு தெரிவிப்பவையாகவே உள்ளன. இந்நிலையில், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்கள் வெளியிடும் தகவல்கள் அவர்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று காணத் தயாராகவுள்ளனரா என்ற சந்தேகத்தையே தோற்றுவிப்பதாகவுள்ளது.

அதாவது, அரசின் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் தொடர்பு சாதனங்கள், தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஒருமைப்பாட்டைக் குலைக்க முற்படுவதோடு, மட்டு. அம்பாறை பகுதியில் காணப்படும் அசாதாரண நிலையை திருமலைக்கும் விஸ்தரிக்கும் நோக்குடன் செயற்படுவதாகவே தெரிகிறது. இதன் மூலம் வடக்கு-கிழக்கிலுள்ள ஸ்திர நிலையைக் குழப்பத்திற்குள்ளாக்கி அமைதியையும் யுத்த நிறுத்தத்தையும் முடிவிற்கு உள்ளாக்குவதே சனாதிபதியின் நோக்கமாகும்.

அவ்வாறு இல்லாதுவிடில், தகவல்களை நடுநிலைமையுடன் வெளியிடுவதோடு, வடக்கு-கிழக்கோ அன்றி இலங்கையின் ஏனைய பகுதிகளிலோ அமைதிக்குப் பங்கம் ஏற்படாத வகையில் செயற்பாடுகளை மேற்கொண்டிருத்தல் வேண்டும். ஆனால், அரசாங்க ஊடகங்களின் போக்கு விடுதலைப்புலிகளுக்கு எதிரானவையாகவும், அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவையாகவே உள்ளன. வேறுவிதமாகக் கூறின், தமிழ் மக்கள் இடையில் பிரிவினையை ஏற்படுத்துபவையாகவும், விடுதலைப் புலிகளை யுத்தத்திற்குள் இழுத்துவிடும் நோக்கம் கொண்டவையாகவே உள்ளன.

சனாதிபதி சந்திரிகா தரப்பின் இத்தகைய செயற்பாடானது அவரின் கூற்றுக்களில் இருந்து வெகு தொலைவில் உள்ளது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக, வெளிநாட்டவர் இதனை விளங்கிக் கொள்ள முற்பட வேண்டும். ஏனெனில் இனியொரு யுத்தம் மூழுமாக இருந்தால் அதற்கு சனாதிபதி சந்திரிகாவின் செயற்பாடே காரணமாக இருக்க முடியும். இதனைச் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்கூற வேண்டிய தேவையும், அவசியம் இன்று எங்களுக்குண்டு.

# நாட்டையும் இனத்தையும் காப்பாற்றவே நாங்கள் தேர்தல் களத்தில் குதித்தோம்

### –ஹெல உறுமயவின் எல்லாவல மேதானந்த தேரர் கூறுகின்றார்

(கொழும்பு)

நாட்டை சுபீட்சமான பாதையில் அழைத்துச் செல்வதும் தார்மீக அரசொன்றை நிறுவுவதுமே தமது நோக்கம்என்று எல்லாவல மேதானந்த தேரர் கூறியுள்ளார்.

அதனால் தான் பௌத்த குருமார்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடுவதை தாம் தவறாகக் கருதவில்லை என்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் அதியுயர் பீடசட்ட சபையின் தலைவர் எல்லாவல கூறியுள்ளார்.

மொறட்டுவயில் நேற்று நடந்த பொதுக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.வடக்கு கிழக்கில் இனப்பிரச்சினை எனும் நிலைப்பாட்டை அரசியல்வாதிகளே உருவாக்கினார்கள்,

இனப்பிரச்சினை என்பது தமிழ் சிங்களப் பிரச்சினையல்ல, அரசியல் கட்சிகளின் கட்டுமானமே. இதனை மக்கள் அனைவரும் தவறாக விளங்கிக் கொள்ள வேண்டாம் இங்கு ஒரே சகோதரர்கள் போலவே தமிழ் சிங்கள மக்கள் உள்ளார்கள்.

எம்மிடம் எந்தவித பிரிவினையும் இல்லை.

இந்த நாட்டில் இருப்பதோ படுகொலைப் பயங்கரவாதம் மட்டுமே என்றும் கூறியுள்ளார்.

பௌத்த தேரர்கள் அரசியலில் போட்டியிடுவது பற்றிக் கூறிய அவர், பிக்குமார் நாட்டையும இனத்தையும் பற்றிச் சிந்திப்பதில்லை என்றும் கூறுகின்றார்கள்.

நாடும் இனமும் ஆபத்துக்குள்ளாகியுள்ள வேளையில் பௌத்த பிக்குகள் இவ்வாறு நடந்து கொள்வது சரிதான் என்றும் கூறினார்கள்.

நாம் நாட்டையும் இனத்தையும காப்பாற்றவே தேர்தல்களத்தில் குதித்துள்ளோம்.

தற்போது, பிக்குகள் கொடுத்ததை உண்டுவிட்டு, விகாரைக்குள் முடங்கிக்கிடக்க வேண்டியதுதானே. பொதுத் தேர்தலில் வாக்குகள் கேட்க நினைக்கின்றார்கள் அதற்குபிக்குகளின் தலைக்குள் என்ன இருக்கிறது ? என்று வினவுகின்றார்கள்.

அப்படி இருந்தாலும் விமர்சிக்கின்றார்கள் இப்படி இருந்தாலும் விமர்சிக்கின்றார்கள்.

இறுதிக் காலத்தில் ஒன்றும் அருந்தாது மரணிப்பதை விட, நல்லதைச் செய்து மரணிப்போம் எனும் பஞ்சசீல கொள்கையின் அடிப்படையில் இந்த பௌத்த மக்களை மீட்டெடுத்து சுபீட்சமுடைய தர்ம ராஜ்ய மொன்றை உருவாக்கவே நாம் தேர்தலில் இறங்கியுள்ளோம் இது தவறல்ல, நோக்கம் சரியானது உண்மையானது என்பதால் தான் தேர்தலில் இறங்கியுள்ளோம என்றும் கூறியுள்ளார்.

# ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச கொள்கைக்கு சனாதிபதி உடன்படுவது குறித்து ஆட்சேபம்

(கொழும்பு)

டோக்கியோ மாநாட்டில் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் ஜனநாயகத்திற்குப் புறம்பான தென ஜே.வி.பி. தலை வர் சோமவன்ச கூறியதை சனாதிபதி ஏற்றுக் கொள்கிறாரே என ஐக்கிய தேசியக கட்சி கவலை தெரிவித்துள்ளது.

டோக்கியோ மாநாட்டின் தீர்மானங்களை நிராகரித்ததுடன் உலக அமைப்பைக் குறைகூறியுள்ளதை நான் அறிகின்றேன் என பிரதிநிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறினார்.

ஜே.வி.பி-சிறிலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டமைப்பு 4.5 பில்லியன் டொலரை நேரடியாக நிராகரிப்பதாக நான் நினைக்கிறேன். சோம வன்சவின் கருத்துக்கு சனாதிபதி இணங்கினால் நான் ஆச்சரியப்படுவேன். எல்லாக கடனும் சில நிபந்தனைகளின அடிப்படையில் தான் வழங்கப்படுகிறதென சோமவன்ச அமரசிங்க உணர வேண்டுமென பந்துல குணவர்த்தன கூறினார்.

4.5பில்லியன் நிதியுதவி நிறுத்தப்படுவதால் நாட்டின் அபிவிருத்தி பின்னடைந்துவிடும் என்பதை அவர் விரும்புகிறார். மேலும் இவ்வுதவிநிறுத்தப்பட்டால கிராமிய மின்சாரத் திட்டம், வீதி அபிவிருத்தித் திட்டங்கள் கிராமத் திட்டங்கள், மேற்கொள்ளப்படாது. பெரும் பாலும் கமக்காரர்கள் பாதிக்கப்படுவார்கள். மீனவர்கள், தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்படு வார்கள். இதனால் ஜே.வி.பி. நாட்டை 1505 ஆண்டிற்கு கொண்டு வந்து விடுமென பந்துலகுண வர்த்தன கூறினார். ஜே.வி.பி. மட்டு மல்ல எல்லாக் கட்சிகளுமே நாட்டுக்கு வெளியே வங்கியில கடன்களைப் பெறுகின்றார்கள். தற்போதைய சனநாயகமும் அதுவே என பந்துலகுண வர்த்தன கூறினார்.

# வைத்தியர்களின் சம்பளம் மீளாய்வு இன்றேல் முரண்பாடுகள் அதிகரிக்கும்

### -சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

இரண்டாம் தர நிலையில் உள்ள வைத்தியர்களின் சம்பள மீளாய்வு செய்யப்படாவிட்டால் சுகாதாரத் துறை சேவையாளர்களின் சம்பள முரண்பாடுகள் மேலும் அதிகரிக்குமென சுகாதார சேவைகள் தொழிற் சங்கக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

வைத்திய அதிகாரிகளின் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கென நியமிக்கப்பட்ட நடவடிக்கைகளின் போது இரண்டாந்தர நிலையில் உள்ள வைத்தியர்களின் சம்பளங்கள் முற்றாக மீளமைக்கப்பட்டிருந்தன.

கூட்டமைப்பின் இணை ஒழுங்கமைப்பாளரான சமன்ரத்னப்பிரிய கருத்துத் தெரிவிக்கையில், தங்களது சம்பளங்கள் மேலும் அதிகரிக்கப்பட வேண்டும என்ற வகையில் இவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறியுள்ளார்.

நேற்று முன்தினம்நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரைநிகழ்த்திய சமனரத்னப்பிரிய சம்பள அதிகரிப்புக்கள் வழங்கப்படாவிட்டால் சுகாதார சேவையைச் சேர்ந்த ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்கும் வகையில் அது அமைந்திருக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

தங்களது இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் பாரிய அளவில் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கூட்டமைப்பு தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிரதமர் இருவருட அவகாசம் கோருகின்றார்!

(கொழும்பு)

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டின்சமாதானத்தையும் அபிவிருத்தியையும் ஐக்கிய தேசிய முன்னணி முன்னெடுக்க விருந்தபோதும் பாராளுமன்றக் கலைப்பால் தடைப்பட்டு விட்டதாக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் பியதாச நுவரெலியா மாவட்டத்தில் நடந்த கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேலும் இருவருடங்கள் பொறுத்திருக்கும் படிபிரதமர் தனது தேர்தல் பிரச்சாரத்தில் மக்களை கேட்டுள்ளார்.

இரு வருடத்துக்குள் பாராளுமன்றததைக் கலைத்தால் நாட்டினதும் மக்களினதும் நன்மை கருதி செயற்பட அரசாங்கத்தால் முடியாது போய் விட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். எப்படியிருநதாலும் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றுவதோடு திட்டமிட்டபடி சமாதான முன்னெடுப்புக்களும் அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளாரென அவர் கூறினார்.

# ஆசிய கிண்ண கிரிக்கெட் ஜூலையில் நடைபெற ஏற்பாடு

ஆசிய கிண்ணகிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் சிறிலங்காவில் நடைபெறவுள்ளது. இதில் 6நாடுகள் பங்கேற்கவுள்ளன. டெஸ்ட் அந்தஸ்து பெற்றுள்ள இந்தியா, பாகிஸ்தான், சிறிலங்கா, பங்களாதேஷ் ஆகிய நான்கு நாடுகளுடன் நேபாளமும் கலந்து கொள்ளவுள்ளது.ஆறாவது நாடு பின்னர் தெரிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியகிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கமையபோட்டிகள் ஜூலை-15ம் திகதி முதல் ஆகஸ்ட் 1ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

## அமெரிக்கா தகுதி

சர்வதேச கிரிக்கெட்போட்டியில் முதன் முறையாக அமெரிக்கா விளையாடவுள்ளது.

6 நாடுகளுக்கு இடையே நடைபெற்ற சலஞ்ப் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் லண்டனில் செப்டம்பர் மாதம்நடைபெறவுள்ள ஐ.சி.சி. சாம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாட அமெரிக்கா தகுதிபெற்றுள்ளது.

# கிழக்கின் சிறுபிரச்சினையை சில ஊடகங்கள் பூதாகரமாக்குகின்றன

## -புதுவை இரத்தினதுரை கண்டனம்

தற்போது கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சிறுபிரச்சினையை சிலஊடகங்கள் பூதாகரமாக்கி சுயலாபம் அடைய முற்படுகின்றன. அவ்ஊடகங்கள் வெளியிடுகின்ற செய்திகள் மூலம் மக்களிடையே தவறான தகவல்களை பரப்பவும் அவை முற்படுகின்றன. இவ்விடயத்தில் தமிழ் மக்கள் மிகுந்த விழிப்புடன் இருக்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார் விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை.

"நிதர்சனம்" நிறுவனத்தின் 18ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ள ''அம்மா!நலமா? எனும் திரைப்படவெளியீட்டு விழா நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று மாலை இடம்பெற்றிருந்தது. "நிதர்சனம்" வெளியீட்டுப் பிரிவின் யாழ்.மாவட்ட பொறுப்பாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் புதுவை இரத்தினதுரையுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான மாவை சேனாதிராசா, சீ.வி.கே. சிவஞானம் திரைப்படவெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த வீரா மற்றும் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

முதல் பிரதியை யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி வெளியிட்டு வைக்க மாவை சேனாதிராசா மற்றும் சீ.வி.கே. சிவஞானம் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

ந.கேசவராஜனின் இயக்கத்தில் வெளிவந்துள்ள திரைப்படத்திற்கான விமர்சன உரையை எழுத்தாளர் ஐ.சாந்தன் ஆற்றினார்.

பிற்பகல் 4.00மணிக்கு இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை "நிதர்சனம்" வெளியீட்டுப் பிரிவின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் அப்பன் ஏற்றிவைத்தார்.

அங்கு வெளியீட்டு உரையை ஆற்றிய புதுவை இரத்தினதுரை மேலும் பேசுகையில், எதிர்வரும் தேர்தல் முக்கியமானதோர் விடயத்தை சர்வதேச உலகுக்கே சொல்லவுள்ளது. இதுவரை எழுச்சியுடன் இடம்பெற்ற விடுதலைப்போராட்டம் ஓய்ந்து போகுமா? அல்லது தொடர்ந்து முன்னெடுக்கப்படுமா? என்பதே அதுவாகும். சிலர்இந்தத் தேர்தல் மூலம் என்ன பயன் எனவும் கேள்வி எழுப்பியும் வருகின்றனர்.

நான் கூட தேர்தலில் நம்பிக்கை யற்றவனாகவே இருந்தவன். கடந்த 50 வருடங்களுக்கு மேலாக தேர்தலில் நான் வாக்களித்திருக்கவுமில்லை. ஆனாலும் இந்த தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. விடுதலைப் புலிகளது மக்கள் பலம் பற்றி இத்தேர்தலில் நாடிபிடித்துப் பார்க்க சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கிறது.

இதனால் விடுதலைப்புலிகளே தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் எனத் தெரிவிக்கும் தேர்தலில் நிற்கும் கூட்டமைப்பை ஆதரிக்குமாறு நான் கோருகின்றேன்-இந்த வேட்பாளர்களுக்குத்தான் வாக்களியுங்கள் என நான் கூறப்போவதில்லை. ஆனாலும் வீட்டுச்சின்னத்திற்கு வாக்களித்து யாழ். குடாநாட்டின் 9 ஆசனங்களையும் கூட்டமைப்புக்கு கிடைக்க ஆவன செய்யுங்கள் குறிப்பாக கலைஞர்களிடம் கலைபண்பாட்டுக் கழகத்தின் பொறுப்பாளர் என்ற வகையில் அதையே வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றேன். எனவும் தெரிவித்தார். (27)

# மட்டு.இல் விற்பனைக்கு எடுத்துச்சென்ற தினக்குரல் பத்திரிகை பறிமுதல்

## இல. தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு கொண்டு சென்ற தினக்குரல் பத்திரிகை நேற்றுக்காலை வாழைச்சேனையில் வைத்து இனம் தெரியாத நபர்களினால் பறித்து செல்லப்பட்டுள்ளது.

இப்பத்திரிகையை கொண்டு சென்ற பேருந்தை வழிமறித்தவர்கள பத்திரிகைக் கட்டுக்களை பறிமுதல் செய்ததுடன் இனிமேல் இப்பத்திரிகையை கொண்டு வரக்கூடாதெனவும் எச்சரித்துள்ளனர்.

இச் சம்பவத்தை இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டித்துள்ளது. ஊடக சுதந்திரத்திற்கும் சனநாயக மரபுகளுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் இதுவென இவ்ஒன்றியம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதேவேளை இப்பத்திரிகை இன்றும் அங்கு அனுப்பிவைக்கப்படுமென தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பி.பி.ஸிக்கு கருத்து தெரிவிக்கையில் தெரிவித்தார்.

# யுத்த சூனியப்பிரதேசத்தில் வாக்களிப்பு

## ஈ.பி.டி.பி. எதிர்ப்பு தெரிவிப்பு

எதிர்வரும் தேர்தலின் போது யுத்த சூனியப்பிரதேசங்களில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு ஈ.பி.டி.பி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் வேட்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் நேற்று மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகர் மௌனகுருசாமி தலைமையில் நடைபெற்றுள்ளது. இதன் போதே ஈ.பி.டி.பி. இதனை சுட்டிக்காட்டியுள்ளது. ஏனெனில் இப்பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டால் தேர்தல் மோசடிகள் இடம் பெறலாமென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அத்துடன் கடந்தகால தேர்தல்கள் போன்று இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென அவர்கள் மேலும் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கு உதவித் தேர்தல் ஆணையாளர் பதிலளிக்கையில் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேச வாக்காளர்கள் விடயம் மட்டக்களப்பு மாவட்டத்துடன் மட்டும் தொடர்புடைய விடயமல்ல நான்கு தேர்தல் மாவட்டங்கள் தொடர்புடைய விடயம் என்பதால் இதுபற்றி தேர்தல் ஆணையாளர் நான்கு மாவட்ட தேர்தல் தெரிவு அத்தாட்சி அலுவலர்களுடன் கலந்தாலோசித்து பின்னர்முடிவெடுக்கப்படுமென தெரிவித்துள்ளார்.

# உண்மையான சுதந்திரக் கட்சியினர் கூட்டணிக்கு வாக்களிக்க மாட்டார்கள்

## இல.பௌத்த பேரவைத் தலைவர்

உண்மையான சிறிலங்கா சுதந்திரகட்சியினர் இந்த கூட்டு கட்சிக்கு வாக்களிக்க மாட்டார்கள் என நம்புகிறேன்.

என்று இலங்கை பௌத்த பேரவையின் தலைவர் பேராசிரியர் வஜீரஞான தேரர் கூறியுள்ளார்.

25வருடகாலங்கள் தொட்டு இந்நாட்டில் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றது இதில் எந்த வெற்றியும் ஏற்படவில்லை ஆனால் தற்போது சுதந்திர கட்சியின் தலைவி சந்திரிக்கா அம்மையார் கொலைகார பயங்கரவாத குழுக்களுடன் கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளர் இப்பொழுது மக்களுக்காக முதலைக்கண்ணீர்விடும் ஜே.வி.பியினர் பொதுமக்கள் பலரை கொடூரமாக கொலை செய்ததை நாட்டு மக்கள் மறக்கமாட்டார்கள்.

### விண்ணப்பங்கள்...

நடைபெறும் எனவும் அன்றைய தினம் மாவட்ட காரியாலயத் திற்கு வேறு காரியங்களுக்காக வரவேண்டாம் என பிரதேச செயலாளர் சந்திர ரத்தின பல்லேகல தெரிவித்துள்ளார்.

### பெண்...

பட்டது. அதனைத்தொடர்ந்து அப்பகுதிகளில் நின்றிருந்த மக்கள் படையினரின் இவ்அடாவடித்தனங்களுக்கு எதிர்ப்புத்தெரிவித்ததால் படையினர் அங்கிருந்து விலகிச் சென்றுள்ளனர். (33)

### இராணுவக்....

மறு தரப்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பி. றுவன் சந்திரசேகர, சட்டத் தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் மற்றும் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள் சி.க. சிற்றம்பலம், வ. ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

சந்திப்பில் கருத்து வெளியிட்ட சுசில் சந்திரபால மேலும் தெரிவிக்கையில், தேர்தல் நடவடிக்கைகளில் படைத் தரப்பு எந்தவித குறுக்கீடுகளையும் செய்ய மாட்டாதெனவும், வாக்களிப்பு நிலையங்களில் இருந்து 500 மீற்றருக்கு அப்பாலேயே அவர்கள் நிலை கொண்டிருப்பர் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் தமது வாக்காளர் அட்டைகளை கடமையில் இருக்கும் பொலிசாரிற்கு காண்பித்துச் சோதனை நடவடிக்கைகள் ஏதுமின்றி வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகை தர முடியுமெனவும் அவர் தெரிவித்தார். (27)

### பயன்மிக்க...

பெற்ற சந்திப்பையடுத்து தூதுவர் பத்திரிகையாளருக்கு இவ்வாறு தெரிவித்தார்.

எமது சந்திப்பில் பரந்துபட்ட விடயங்கள் ஆராயப்பட்டன முக்கியமாக நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் வன்முறைகளற்றது நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுவதற்கான சூழ்நிலை குறித்து ஆராய்ந்தோம் அத்துடன் தேர்தலைத் தொடர்ந்து புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதும் சமாதானப்பேச்சுவார்த்தையை விரைவாக ஆராய்ந்ததோடு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவேண்டிய புனரமைப்பு மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்ந்தோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (லோ)

### கிளி....

டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முகாமைத்துவப்படுத்தப்படும் அரசஅரசசார்பற்ற நிறுவனங்களின் கட்டடத்தொகுதியை சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

அங்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் கே.பி.றெஜி தலைமையிலானவர்களை சந்தித்து தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வரும் மனிதாபிமான வேலைத் திட்டங்களை கேட்டறிந்து கொண்டதுடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் இயங்கி வரும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கு சென்று மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பணிப்பாளர் பரணி உள்ளிட்ட குழுவினரை சந்தித்து அதன் வேலைத்திட்டங்கள் தொடர்பாக கேட்டறிந்ததுடன் கண்ணிவெடி அகற்றும் பணியை பரந்தன் பகுதியில் மேற்கொள்வதை நேரடியாக சென்று பார்வையிட்டு அது தொடர்பான விளக்கங்களையும் கேட்டறிந்து கொண்டார்.

அதனைத்தொடர்ந்து கரடிப்போக்கு சந்திக்கு அண்மையில் உள்ள வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனத்துக்கு சென்று அதன்பணிப்பாளர் உள்ளிட்டோரை சந்தித்து செயற்கை உறுப்பு உருவாக்கம் தொடர்பாக கேட்டறிந்து அவற்றை நேரடியாகவும் பார்வையிட்டார்.

பின்னர் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முகாமைத்துவப்படுத்தும் அரசசார்பற்ற நிறுவனங்களின் தொகுதியில் வைத்து வன்னியில் பணியாற்றிவரும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனபிரதிநிதிகளையும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளையும் கிளி.முல்லை மாவட்டங்களை சேர்ந்த பிரதிமாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களையும் தனித்தனியே சந்தித்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் தற்போது அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் கேட்டறிந்து கொண்டனர்.

மேற்படி குழுவினர் இன்று மாலை முல்லை மாவட்டத்தின் பல்வேறுபட்ட இடங்களுக்கும் சென்று அங்குள்ள மக்களின் நிலை தொடர்பாகவும் அங்கு மேற்கொள் ளப்பட்ட அபிவிருத்திப்பணி களையும் பார்வையிட்டுள்ள பின்னர் இன்று மாலை யாழ்ப்பாணம் செல்லவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (லோ)

### தமிழ்...

வலியுறுத்தினோம். முக்கியமாக இன்றைய அரசியல் சூழ்நிலை வடகிழக்கு தமிழர் தாயகத்தின் அபிவிருத்தி மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகளை முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாடான சூழ்நிலைகள் பற்றியே ஆராய்ந்தோம்.

☐ இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள மக்கள் வாக்களிப்பது பற்றி ஏதாவது முடிவுகள் எடுத்தீர்களா?

எமது கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் வாழ்கின்ற பலஇலட்சம் மக்களுக்கு இந்த முறை வாக்களிப்பதற்கான உரிமை வழங்கப்பட வேண்டும். ஏனெனில் தற்போது சமாதானச் சூழல் நிலவுகிறது. யுத்த நிறுத்த உடன்பாடு எட்டப்பட்டு அது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இந்த மக்கள் இம்முறை தேர்தலில் தமது அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதே அனைவரது விருப்பமும். அந்த விருப்பங்களுக்கு சிறிலங்கா அரசாங்கம் சரியாக மதிப்பளிக்க வேண்டும் என்பதை அவர்களிடம் வலியுறுத்தியிருக்கிறோம். அவர்களும் மிகவும் உற்சாகமாகவும் நம்பிக்கையோடும் இருக்கிறார்கள். இந்த மக்களுக்கு சனநாயகரீதியான உரிமைகளை வழங்குவது இன்றைய சூழலில் அவசியமானது என்பதை சர்வதேசசமூகமும் உணர்ந்திருப்பதாகவும் அதற்கான சாத்தியப்பாடான சூழலை உருவாக்குவதற்கான தமது முயற்சிகளும் இருக்கும் என்றும் அவர்கள் எமக்கு உறுதியளித்திருக்கிறார்கள்.

☐ மட்டக்களப்பு பதட்ட நிலையைத் தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா?

மட்டக்களப்பு பதட்டநிலை அது கருணா என்கின்ற ஒரு தனிமனிதனுடைய குழப்பம் அது தொடர்பான தெளிவான நிலைப்பாட்டை மக்களுக்கு விளக்கி எங்களது தேசியந்தலைவரதும் எமது தலைமைப்பீடத்தினதும் நிலைப்பாட்டை அண்மைக்காலமாக ஊடகங்கள் ஊடாகவும் ஏனைய வழிமுறைகள் ஊடாகவும் விளக்கிவருகின்றோம். அந்த வகையில் அங்கே மக்கள் மத்தியில் போலியான முறையில் விசமத்தனமான முறையில் பரப்பப்பட்ட வதந்திகளை நீக்கி உண்மையான நிலைப்பாடுகளை நாங்கள் மக்களுக்கு கொண்டு சென்றுள்ளோம் அது தற்பொழுது மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது.

☐ ஐந்நூறுக்கும் அதிகமான போராளிகளை வன்னியில் இருந்து மட்டக்களப்புக்கு அனுப்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது?

ஐந்நூறு போராளிகளை நாங்கள் இங்கிருந்து மட்டக்களப்புக்கு அனுப்பவேண்டிய தேவை எமக்கில்லை. எங்களுடைய தலைவரது படைகள் பல்லாயிரக்கணக்கில் அங்கேயே நிற்கிறார்கள். ஆகவே நாங்கள் இங்கிருந்து படைகளை அனுப்பவேண்டிய தேவை இல்லை. ஆகவே அவர் செய்த தவறுகளும் மக்கள் விரோதச்செயல்களும் எமது தேசவிடுதலைக்கான, தேசியத்துக்கெதிரான செயல்களும் இன்று அவரையே கலங்க வைத்துப பயப்பீதியை கிளப்பியி ருக்கிறது. அதனால் அவர் அவ்வப் போது தன்னை அறியாமல் இப்படியான பிதற்றல்களைச் செய்து கொண்டிருக்கிறார் என்று தான் நான் நினைக்கிறேன்

திருகோணமலைக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன் அவர்களை விடுதலைப்புலிகள் சுட்டுக் கொன்று விட்டதாக தெரிவிக்கப்பட்டது பற்றி?

பதுமன் அவர்களை நீங்கள் இன்றும் சந்திக்கவேண்டுமானால் சந்திக்கலாம். நேற்றைய தினம் அவர் இங்கே நின்று பலபத்திரிகையாளர்களை சந்தித்திருக்கிறார். அதாவது கருணாவினுடைய விசமத்தனமானதும் முட்டாள் தனமானதுமான பரப்புரைகளுக்கெல்லாம் நாம் தொடர்ந்து பதில் கூறுவதை விடஆக்க பூர்வமான தமிழ் தேசியத்தை பலப்படுத்துவதையும் தமிழ்த்தேசியத்தின் எதிர்காலத்தை வலுப்படுத்துவதற்கும் எமது தலைவருடன் எங்களது மக்கள் கைகோர்த்து நிற்பார்கள். என்பதில் எங்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது. அந்தவகையில் ஊடகங்களும் அதற்கான அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். அது உங்களது கடமை எனவும் தெரிவித்தார்.

நேற்றுக்காலை 11.00 மணிக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை நடுவப்பணிமனையில் நடைபெற்ற இச்சந்திப்பு பிற்பகல் 1.30 மணிவரை நீடித்தது. மேற்படி சந்திப்பில் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீவன் எவன்ஸ் அடங்கிய குழுவினரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (லோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.